# பைபிள் சரித்திரக் கதைகள்

74/4.47

1346

★

D. சாமுவேல் பிள்ளை, எம்.ஏ., எல்.டி.,

கல்வி இலாக்கா அதிகாரி

★

ஒற்றுமை ஆபீஸ்,

தியாகராயநகர், சென்னை. [விலை அணா 8

Q6:21
N46

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 109435
EGMORE, MADRAS-600 008

# முகவுரை

பைபிள் என்று சொல்லப்பட்ட சத்திய வேதத்தில் நமது ஆத்தும ஈடேற்றத்துக்கென்று அநேக சரித்திரங்கள் எழுதப்பட்டுள்ளன. சத்திய வேதத்தின் பல புத்தகங்களில் பல பாகங்களில் பரந்து கிடப்பன அவற்றை ஒருங்குசேர்த்து ஒரே சமயத்தில் யாவரும் வாசித்து, அறிந்து, அவரவர் அநுபோகத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்தோடு மாத்திரம் இந்நூல் எழுதப்பட்டது. எம்மதத்தினரும் இவற்றை வாசிக்கும்படியாக, கிறிஸ்துமத விசேஷித்தப் போதகங்களை இவ்விடம் விவரித்துக் கூறாது, சத்தியவேதத்தில் கூறியுள்ள யூதர் சம்பந்தமான சரித்திரத்தையே ஆதாரமாக்கி இவை எழுதப்பட்டுள்ளன. இச் சரித்திரங்களை வாசிப்போர் முதல்நூலாகிய சத்திய வேதத்தைத் தாங்களே நேரில் வாசித்து இவற்றிற் கொப்பான இன்னும் அநேக சரித்திரங்களைக் கற்றறிய ஆசைகொள்வாரென்ற நம்பிக்கையுமுண்டு.

D. சாமுவேல் பிள்ளை,
ஆக்கியோன்.

5-12-'46.

# 1. ஆபிரகாம்

ஆபிரகாமின் பிறந்தகம் ஐபிராத்து நதி தீரத்திலுள்ளதும், டிகிரீஸ் நதி ஐபிராத்து நதியோடு கூடுமிடத்திலுள்ளதுமான ஊர் என்றபட்டணம். தற்காலத்தில் அவ்விரண்டு நதிகள் பாயும் தேசம் ஈராக் என்றழைக்கப்படும். ஆபிரகாமின் காலம் கிறிஸ்துவுக்கு இரண்டாயிர வருஷங்களுக்கு முன்பு.

ஆபிரகாம் சுய அறிவுக்கு வந்த பிற்பாடு, தன் தேசத்தாரின் வழக்க பழக்கங்கள் அவர் மனதுக்குப் பிடிக்கவில்லை. அநேக தேவர்களை வணங்குவது அவர் எண்ணத்துக்கு மாறாகவிருந்தது. ஆகவே அவர், அவர் மனைவி, அவர் தகப்பனார், அவர் சகோதரன் மகன் லோத்து இந்நால்வரும் தங்களோடு வரப்பிரியப்பட்ட சில வேலையாட்களோடும் தங்கள் சொந்த ஊரை விட்டுப் புறப்பட்டு, ஐபிராத்து நதிக் கரையோரமாக வடக்கே பிரயாணம் செய்து, அந்நதியின் முகத்துவாரங்கள் ஒன்றின் பக்கததிலுள்ள ஆரான் என்னும் பட்டணத்தில் சிலகாலம் வசித்து வந்தார்கள். அங்கே சில வருஷங்களுக்குப் பிறகு அவர் தகப்பனார் மரிக்க, அவர் மற்றவர்களோடு புறப்பட்டு சூரியா தேசத்தின் வழியாக பலஸ்தினா நாட்டை அடைந்தார். மோரேயின் சமவெளியிலுள்ள சீகேம் என்ற இடத்தில் யாவற்றையும் சிருஷ்டித்து பாதுகாத்து நடத்திவரும் ஒரே தெய்வத்தை வணங்

கினர். அங்கே தெய்வம் அவருக்குக் காட்சி கொடுத்து உனக்கும் உன் சந்ததிக்கும் இந்த தேசத்தைக் கொடுப்பேன் என்று உறுதிமொழி கூற, அவரும் அங்கே அம்மெய்யான தெய்வத்தை வழிபட ஒரு பலிபீடம் கட்டினர். பிறகு சற்று அருகாமையிலுள்ள பேத்தேல் என்ற இடத்துக்குக் கிழக்கே சென்று அங்கேயும் ஒரு பலிபீடம் கட்டி தெய்வத்தை வழிபட்டு சிலகாலம் சீவித்து வந்தார்.

தேசத்தில் பஞ்சம் உண்டாயிற்று. ஆகவே மனைவி மற்றவர்களோடு பக்கத்திலுள்ள எகிப்து தேசம் சென்று அங்கே குடியேறினர். அவர் மனைவி அழகு வாய்ந்தவளாய் இருந்தது பற்றி அத் தேசவழக்கப்படி அவளை ராச அரண்மனையின் அந்தப்புரத்தில் கொண்டுபோய் சேர்த்தார்கள். மனைவி என்று உண்மையைச் சொன்னல் தன்னைக் கொன்று விடுவார்களென்று அவளைத் தன் சகோதரி என்று ஆபிரகாம் விளம்பரம் பண்ணியிருந்தார். ஒரு முறையில் அவள் தன் தகப்பனுக்கு மூத்த தாரமாக இருந்த ஸ்திரீயின் மகளானதால் சகோதரி என்று உரைத்ததும் முற்றிலும் பொய் யல்ல. இவள் நிமித்தம் அரண்மனையில் ஆபிரகாமுக்கு அதிக செல்வாக்கு உண்டாயிருந்தது. பிறகு அரசன் அவள் ஆபிரகாமுக்கு மனைவி என்று தனக்குத் தெய்வத்தால் உண்டான பல தொந்தரவுகளின் மூலமாக அறிந்தபோது, ஆபிரகாமிடம் அவளை அனுப்பி அக்காலத்தின் செல்வமாகிய திரளான ஆடு மாடுகளையும் அவருக்கு இன

மாகக் கொடுத்து அவரை அனுப்பிவிட்டார். அவரும் புறப்பட்டு திரும்பவும் தாம் பலிபீடம் கட்டி தெய்வத்தை வழிபட்ட பேத்தேல் என்ற ஊருக்கே செல்ல வந்தனுகத் திரும்பினர்.

ஆடுமாடுகள் அதிகப்படவே, ஆபிரகாமின் மந்தை மேய்ப்பவருக்கும், அவர் சகோதரன் மகன் லோத்துவின் மந்தை மேய்ப்பவருக்கும் வாக்கு வாதம் உண்டாயிற்று. ஆபிரகாம் லோத்தைக் கூப்பிட்டு, உன் மந்தைக்கு ஏற்ற செழிப்புள்ள தேசத்தை நீ முதலில் தெரிந்து கொள். நீ வலது பக்கம் போனல் நான் இடது பக்கம் போகிறேன், அல்லது நீ இடது பக்கம் போனல் நான் வலது பக்கம் போகிறேன். நமக்குள் நிலத்தின் விஷயமாக வருத்தம் கூடாது என்று சொல்ல, லோத்தும் யோர்தான் நதிபாயும் செழிப்புள்ள தேசமாகிய சோதோம் என்ற கீழ் பாகத்தைத் தெரிந்து கொண்டு அங்கே குடியேறினர். ஆபிரகாமும் அங்கிருந்து புறப்பட்டு தெற்கேயுள்ள மம்ரே சம வெளிகளில் குடியேறி, அங்கேயும் தெய்வத்துக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி காலம் கழித்து வந்தார்.

இப்படியிருக்க, ஒருநாள் திடீரென்று ஐந்து சிற்றரசர்கள் கூடி லோத்து வசித்த தேசங்களைக் கொள்ளையிட்டு, லோத்தையும், லோத்தின் மனைவி மக்களையும் ஆடுமாடுகளையும் சிறைபிடித்துச் சென்ருர்கள் என்ற செய்தி ஆபிரகாமுக்கு எட்டிற்று. அவர் உடனே தன்னிடம் இருந்த முன்னூற்றுப்

பதினெட்டு ஆட்களைக் கூட்டிக் கொண்டு தெய்வத்தை முன்னிட்டு அச்சிற்றரசரோடு யுத்தம் செய்யப் புறப்பட்டார். தெய்வம் கூட நின்றது. சிற்றரசரைத் தோற்கடித்து லோத்து மற்று முதலிய மனிதரையும், மிருகங்களையும் பொருட்களையும் ஆபிரகாம் திரும்பக் கொண்டு வந்தார். சோதோமின் அரசன் ஆபிரகாமுக்குப் பதில் உபகாரம் செய்ய நினைத்து, மனிதரை எனக்குக் கொடுத்துவிடும் பொருட்களை நீர் எடுத்துக் கொள்ளும் என்றான். ஆபிரகாமோ ஒரு சரட்டையாகிலும், ஒரு பாதரட்சையின் வாரையென்கிலும் நான் எடுத்துக் கொள்ள மாட்டேன் என்று சொல்லி எல்லாவற்றையும் சோதோமின் அரசனுக்கே திருப்பிக் கொடுத்து விட்டார்.

தனக்குக் குழந்தையில்லாதிருப்பது ஆபிரகாமுக்கு வெகு அதிருப்தி. ஆனால் தெய்வம் அடிக்கடி காட்சி கொடுத்து அந்த தேசத்தை ஆபிரகாமுக்கும் அவர் சந்ததிக்கும் கொடுப்பேன் என்பதை வெளிப்படுத்திற்று. அக்காலத்தில் இருவர் ஒரு உடன்படிக்கைக்குட்படுவார்களென்றால், அவர்கள் சாதாரணமாக பலி கொடுக்கும் ஒரு மிருகத்தைத் துண்டித்து, அவற்றைப் பக்கத்துக்கு ஒன்றாக வைத்து, இரண்டுக்கும் இடையில் ஒருவரையொருவர் சந்தித்து அங்கே தங்கள் உடன்படிக்கைக்கு உட்படுவது வழக்கம். உடன்படிக்கையை மீறும் பட்சத்தில் அந்த மிருகம் துண்டிக்கப்பட்டிருப்பதைப் போல் தாங்களும் துண்டிக்கப்படுவார்கள் என்பது அவர்களது எண்ணம். அதற்கொப்ப

ஆபிரகாமும் ஒரு கிடாரி, ஒரு வெள்ளாடு ஒரு ஆட்டுக்கடா, ஒரு காட்டுப்புறா, ஒரு புறாக்குஞ்சு இவற்றில் முதல் மூன்றையும் துண்டித்து பக்கத்துக் கொரு துண்டாகக் கிடத்தி, காட்டுப்புறா ஒரு பக்கமும், புறாக்குஞ்சு ஒரு பக்கமுமாக வைத்து, தெய்வம் நடுவாக வந்து காட்சி கொடுக்குமோவென்று காத்துக் கொண்டிருந்தார். சூரியன் அஸ்தமித்தது. இருட்டும் அதிகரித்தது. அப்போது ஒளி பொருந்திய மேகம் ஒன்று பலி பாகங்களுக்கு இடையே வந்து காட்சி கொடுத்து ஆபிரகாமின் சந்ததி நானூறு வருஷங்கள் எகிப்தில் அடிமைகளா யிருப்பார்களென்றும் பிறகு புறப்பட்டு வந்து அந்த தேசத்தைச் சுதந்தரிப்பார்களென்றும் வாக்குக் கொடுத்தது. ஆபிரகாம் வயது முதிர்ந்தாலும் தனக்கு தெய்வம் ஒரு குழந்தையைக் கொடுக்கும் என்று தெய்வத்தின் மேல் நம்பிக்கையாயிருந்தார்.

ஆபிரகாமின் மனைவி சாராள் தனக்குப் பிள்ளை யில்லாததைக் கண்டு ஒருவேளை தன் தாதியின் வயிற்றில் தனக்கு தெய்வம் சந்ததியை உண்டாக்குமோ வென்று நினைத்து தன் தாதியாகிய ஆகாரைத் தன் கணவனுக்கு மறு மனைவியாகக் கொடுத்தாள். ஆகாரின் வயிற்றில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு இஸ்மவேல் என்று பெயரிட்டார்கள். இஸ்மவேல் இஸ்மவேலராயகி சகல முகம்மதியருக்கும் மூற் பிதாவானன். ஆனல் தெய்வம் காட்சி கொடுத்து உன் பிள்ளையாகிய இஸ்மவேல் அல்ல, உன் மனைவியாகிய சாராளின்

வயிற்றில் உனக்கு சந்ததி உண்டாகும் என்று நிச்சயம் கொடுத்து அந்த உடன்படிக்கைக்கு அறிகுறியாக பிறக்கும் சகல ஆண்களும் சுன்னத்தடைய வேண்டியது என்ற கோட்பாட்டையும் உண்டு பண்ணிற்று. அது இப்போது இஸ்மவேலருக்கு மாத்திரமல்ல, யூதருக்கும் ஒரு முக்கிய சடங்குப் பிரமாணம் ஆயிற்று. இஸ்மவேலுக்கு பதின்மூன்று வயதானபோது சாராளுக்கு இன்னும் ஒரு வருஷ திட்டத்தில் குழந்தை பிறக்கும் என்று அறிவித்ததோடு, தெய்வம் மறுபடியும் காட்சி கொடுத்து சோதோம், கொமோரா அக்கிரமத்தில் மிகுந்திருப்பதால் அதை அழிக்கப் போகிறேம் என்பதையும் ஆபிரகாமுக்குத் தெரிவித்தது. தன் சகோதரன் மகன் லோத்து இருக்கும் தேசம் அழிக்கப்படும் என்று கேள்விப்பட்டு ஆபிரகாம் துக்கத்துக்குள்ளானர். அத்தேசத்தில் ஐம்பது நீதிமான்கள் இருந்தால் அவர்களையும் அக்கிரமக்காரரோடு சேர்த்து அழித்து விடுவீரோ என்று ஆபிரகாம் தெய்வத்தோடு போராடினர். தெய்வம் இணங்கிற்று. ஐம்பது நீதிமான்கள் இருந்தால் தேசத்தை அழிப்பதில்லை யென்று வாக்குக் கொடுத்தது. ஆபிரகாம் திரும்பவும் ஐந்து குறைந்து நாற்பத்தைந்து நீதிமான்களிருந்தால் அழித்துவிடக் கூடாதென்று வருந்தி வேண்டினர். தெய்வம் மறுபடியும் இணங்கிற்று. ஆபிரகாம் பிறகு வருந்தி வேண்டி நாற்பது, முப்பது, இருபது, பத்து நீதிமான்களிருந்தாலும் அழிக்கக் கூடாதென்று வாக்கு வாங்கிக் கொண்டார். ஆனல் என்ன

வேண்டியும் அத்தேசம் அழிவுக்குத் தப்பவில்லை. லோத்து அவன் மனைவி இரண்டு பெண்கள் இவர்களை மாத்திரம் தேசத்தை அழிக்க வந்த தேவதூதர்கள் வெளியேற்றி விட்டுத் திரும்பிப் பாராமல் பக்கத்திலிருக்கும் சோவார் என்ற கிராமத்துக்கு ஓடிவிடுங்கள் என்று சொல்லி, அக்கினியினாலும் கந்தகத்தினாலும் அந்த தேசத்தை யழித்தார்கள். அங்கே தற்காலத்தில் இருப்பது சாக்கடல் என்று சொல்லப்பட்ட ஒரு ஏரி. அதில் மீன்கள் முதலிய யாதொரு சீவ செந்துவும் கிடையாது. லோத்தின் மனைவி தன் வீடும் ஆஸ்தியும் அழிந்ததே என்று மனவேதனைப்பட்டு தேவதூதரின் சொல்லை அசட்டை செய்து சோதோமைத் திரும்பிப் பார்த்து உப்பு ஸ்தம்பமாக மாறிப் போனதாக ஒரு பாரம்பரை யுண்டு.

ஆபிரகாம் முன் எகிப்துக்குப் போனதுபோல இப்போது பெலிஸ்தியரின் தேசமாகிய கேரார் என்னும் தேசத்துக்குப் போனார். முன் போலவே சாராளைத் தன் சகோதரி என்று அறிவித்தபடியால் அத்தேசத்தின் அரசனாகிய அபிமெலேக் என்பவன் ஆபிரகாமின் மனைவியாகிய சாராளைத் தன் அந்தப்புரத்தில் சேர்த்துக் கொண்டான். இது காரணம் பற்றி அரசனின் பட்டஸ்திரீக்கும் அரண்மனையில் உள்ள மற்ற ஸ்திரீகளுக்கும் கர்ப்பம் அடைபட்டது. தெய்வம் அரசனையும் எச்சரித்து சாராளைத் திரும்ப ஆபிரகாமண்டை அனுப்பிவிட வேண்டுமென்று கட்டளையிட, அரசனும் அப்படியே செய்தான்.

தெய்வம் மறுபடியும் காட்சி கொடுத்து ஒரு வருஷ காலத்தில் ஆபிரகாமின் மனைவிக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கும் என்று கூற, குழந்தையும் அப்படியே பிறந்தது. அதற்கு ஈசாக்கு என்று பெயரிட்டார்கள். குழந்தை சற்று பெரியவனுகும் போது ஏதோ குழந்தைகளினிமித்தம் சாராளுக்கும் அவள் தாதி ஆகாருக்கும் மன வருத்தம் உண்டாயிற்று. தன் பிள்ளையோடு இஸ்மவேலும் உடன் சுதந்தரனுகிறது எப்படி என்று சாராள் தன் உள்ளத்தில் எண்ணங் கொண்டு தன் கணவனிடம் சென்று ஆகாரையும் இஸ்மவேலையும் வீட்டைவிட்டு வெளியே அனுப்பிவிட வேண்டுமென்று சாதித்தாள். ஆபிரகாமுக்கு இது விஷயம் மகா மன வருத்தத்தை யுண்டாக்கினு போதிலும், வீட்டில் சமாதானம் கெட்டுப் போகாதபடி சாராள் சொற்படி ஆகாரையும் இஸ்மவேலையும் வெளியே அனுப்பி விட்டார். திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்ற முதுமொழிப்படி மனித உதவியற்ற தாயையும் பிள்ளையையும் தெய்வம் காப்பாற்றி வந்தது.

தன் முதிர் வயதில் தனக்குப் பிறந்தத் தன் ஏக சுதந்தரவாளியாகிய ஈசாக்கின் பேரில் ஆபிரகாமுக்கு வெகு பற்றுதல் உண்டாயிற்று. தெய்வமும் தம் மேல் ஆபிரகாமுக்கு உண்டாயிருந்த பக்தியை சோதிக்க விரும்பி, ஆபிரகாமை நோக்கி நீ வெகுவாய் நேசிக்கும் உன் ஏகப்புத்திரனை மோரியா பர்வதத்தில் ஒரு பலிபீடம் கட்டி அங்கே அவனை எனக்கு பலி கொடு என்று கட்டளை கொடுத்தது. அக்காலங்களில் தெய்வத்தை பிரீதி

செய்ய நரபலி கொடுப்பது மானிடருக்குள் வழக்க மாயிருந்தது. ஆபிரகாமும் தெய்வத்தைப் பிரியப் படுத்த எண்ணி சாராளுக்கும் தெரிவிக்காமல் பைய னைக் கூட்டிக் கொண்டு கால்நடையாகப் போய் மோரியா பர்வதத்தைச் சேர்ந்தார். பையனுக்கும் போகிற நோக்கம் தெரியாது. பலிக்கு ஆடு எங்கே யென்று தகப்பனைக் கேட்கிறான். தகப்பனுக்கோ சொல்லக்கூடாத துக்கம். பலிக்கேற்ற ஆட்டை தேவன் கொடுப்பாரென்று உத்தரவு கொடுத்து, பலிபீடத் தண்டைச் சேர்ந்ததும், பையனின் கைகளையும் கால்களையும் கட்டி அவனைத் தூக்கி பலிபீடத்தின் மேல் வைத்து, அவனை வெட்டும்படி வாளை ஓங்கினார். உடனே அசரீரி வாக்குப் பிறந் தது. பிள்ளையாண்டானைத் தொடாதே என்று கட் டளை பிறந்தது. பக்கத்தில் முட்களில் சிக்கிக் கொண்டிருந்த ஒரு ஆட்டுக் கடாவைப் பிடித்து ஆபிரகாம் அங்கே பலி கொடுத்தார். பிள்ளை உயிர் தப்பினான். ஆபிரகாமுக்கும் தேவன் பேரில் பக்தி அதிகப்பட்டது.

சாராள் முதிர் வயதில் மரித்தாள். அப்போது ஆபிரகாம் மக்பேலா என்ற கெபியை நானூறு சேக்கல் வெள்ளிக்கு விலைக்கு வாங்கி அதிலே அவளை அடக்கம் செய்தான். ஈசாக்குக்கு வயது வந்தபடியால் தன் உத்தம வேலைக்காரனை எலி யேசரைக் கூப்பிட்டு தன் மகனுக்கு தன் சொந்த ஊராகிய கல்தேயர் நாடு சென்று அங்கே யிருந்து ஒரு பெண் கொண்டுவர வேண்டுமென்று கட்டளை யிட்டு பத்து ஒட்டகங்களின் மேல் பெண்ணுக்

கென்று ஸ்ரீதனம் அனுப்பினர். எலியேசரும் அதற்கு இணங்க வனாந்தர வழியாகப் பிரயாணம் செய்து குறித்த நாட்டையடைந்தார். தண்ணீர் மொள்ள பெண்கள் வந்து கொண்டிருந்தார்கள். தாகத்துக்குத் தண்ணீர் கேட்போம், தனக்கும் கொடுத்து தன் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் கொடுக்கப் பிரியப்படும் பெண்ணே தன் எசமானின் மகனுக்குத் தெய்வம் குறித்தப் பெண்ணாகும் என்று மனதில் எண்ணி தெய்வத்தைப் பிரார்த்தித்து எதிரில் வரும் ஒரு பெண்ணை நோக்கி தாகத்துக்குக் கொடு என்று எலியேசர் கேட்க, அந்தப் பெண் நீர் குடியும், உமது ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்ப்பேன் என்று சொல்லி அந்தப் பத்து ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்த்தாள். உடனே தெய்வம் குறித்த பெண் அதுதான் என்று எலியேசர் நிச்சயித்தார். விசாரித்துப் பார்த்த போது அந்தப் பெண் சாராளின் சகோதரன் லாபானின் மகளாயிருந்தாள். அவள் பெயர் ரெபேக்காள். அவர்கள் வீட்டில் இரவு தங்கி, தான் கொண்டுவந்த வெகுமதிகளைப் பெண்ணுக்குக் கொடுத்து, உத்தரவு பெற்றுப் பெண்ணோடு தம் தேசத்துக்குத் திரும்பினான். ஆபிரகாம் மரித்து சாராளை அடக்கம் பண்ணியிருந்த அந்த மக்பேலா கெபியிலேயே அடக்கம் பண்ணப்பட்டார் என்று அறிந்தான். ஈசாக்கு பெண்ணை விவாகம் செய்து தன் தாய் தகப்பன் இறந்த விசனத்தை ஒருவாறு மேற்கொண்டார்.

ஈசாக்குக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் மூத்தவன் ஏசா, இளையவன் யாக்கோபு. யாக்கோபின் சந்ததி தற்காலத்திலுள்ள யூதர் எனனப்பட்ட சாதி. ஆகவே ஆபிரகாமுக்குத் தெய்வம் கொடுத்த வாக்கு நிறைவேறிற்று. அந்த யூத சாதியில் பிறந்தவர் கிறிஸ்து. அவர் மூலமாக உலகத்துக்கு ஒரு பெரிய வெளிச்சம் உண்டாயிற்று. உன் மூலமாக பூமியின் வமிசங்கள் ஆசீர்வதிக்கப்படும் என்று தெய்வம் ஆபிரகாமுக்கு உரைத்தது கிறிஸ்துவைக் குறித்தே.

ஆபிரகாம் மெய்யான தெய்வத்தை வழிபட்ட மாதிரியை நோக்குங்கால் அது நம் மனதுக்கு உற்சாகத்தையும் தைரியத்தையும் ஊட்டுகிறது. வீடும் நாடும் சுதந்தரமுமல்ல; தெய்வ வழிபாடே அவர் சீவியத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. எங்கே போனாலும் தெய்வத்தை வழிபட்டவருக்கு மனதில் ரம்மியமும் உண்டாகும் என்பதும் இவர் சீவியத்தில் நன்கு விளங்கும். பலவீனமுள்ள மற்ற மனிதரைப் போல் இரண்டொரு முறை தன் வாக்கினால் உண்மையை மறைத்த போதிலும், திரும்பத்திரும்ப தெய்வத்தை வழிபடும் உண்மை நிலைமைக்கு ஒரு மனிதன் வந்தாலொழிய மெய்யான ஆறுதல் மனிதனுக்கு இல்லை யென்பதும் இவர் சீவியத்தில் வெளியாம். சம்பத்து அல்ல மனிதரே முக்கியம், மற்றவர்களைச் சீர்படப்பண்ணி அவர்கள் சுகமாயிருப்பதை நாடுவதே மனிதராகிய நமக்கு சந்தோஷத்தை யுண்டாக்கக்கூடியது என்பதும் ஆபிரகாம் அவர் சகோதரன் மகன் லோத்தோடு செய்த

ஒப்பந்தம் வெளியாக்கும். அவர் பிடிபட்டு கைதியானபோது, தன் சிவனை வெறுத்து அவரை மேற்கொண்ட பலத்த அரசர்களிடம் யுத்தம் செய்தது வியக்கப்படத்தக்கது. தெய்வமும் துணை நின்று அவர் முயற்சியை வாய்க்கப்பண்ணிற்று. அவர் தன்னைவிட்டுப் பிரிந்தும் அவருக்காகவும் அவர் தேசத்துக்காகவும் தெய்வத்திடம் போராடினது எவ்வளவு மேலான காரியம்? வெகுகாலம் நம்பிக்கையோடு காத்திருந்து தமது முதிர் வயதில் தமக்கு ஈவாகக் கிடைத்தப் புதல்வனுடைய ஈசாக்கையும் தெய்வ கட்டளைக்கு இணங்கி தன் கையினுல் வெட்டி பலியிட மனம் ஒப்பினது அவருக்கு தெய்வத்தின்மேல் இருந்த பற்றல்லவோ? தெய்வத்தைப் பற்றின விசுவாசம் அவர் உள்ளத்தில் நாளடைவில் அதிகரித்துப் பலத்துப் போனது. தெய்வ சித்தத்துக்கு தன் சித்தத்தை முற்றிலுமாக அடக்கித் தெய்வத்தை வார்த்தையிலும் சடங்கு வழிபாட்டிலு மாத்திரமல்ல, தம் முழு சீவியத்திலும் பின்பற்றுவது எங்ஙனம் என்பது இவர் சீவியத்தில் நன்கு விளங்கும். இதுபற்றியே விசுவாசிகளுக்குத் தகப்பன் என்ற பட்டமும் இவருக்கு உரியதாயிற்று.

தெய்வ அருளைப் பெறும் வழி, சாதி, குலத்தினுல் அல்ல, மத அநுசாரங்களினுலும் அல்ல, ஒவ்வொரு மனிதனும் தன் மனதை தெய்வத்தைப் பின்பற்ற வேண்டும் என்னும் பேர் அவா கொண்டு சீவிப்பதினுல்தான் சாதிகரும். அச்சாதனைக்குத் தெய்வமும் துணை நிற்கும்.

அது அந்த மனிதனோடு முடிவடைகிற காரியமும் அல்ல. ஆபிரகாமின் சந்ததியில் தெய்வ மக்கள் பலரும் தோன்றி உலகுக்கு ஒளியாக விளங்கி வருவதை நாம் நோக்குங்கால், நம்முடைய தனித்த சீவியம் சீரடையுமென்கில் நமது சந்ததியிலும் உலகத்துக்கு ஒளியான தெய்வ மக்கள் தோன்றுவார் என்பதில் ஐயமில்லை. தெய்வ மக்கள் அவர் எத்தேசத்தினராயினும், எச்சாதியாராயினும், அவர்கள் யவாரும் தெய்வ சந்ததி என்று சொல்லப்படும் அந்த ஒரே சந்ததியைச் சேர்ந்தவர்களே யாவார்.

# 2. மோசே

மோசே ஆபிரகாமைப்போன்ற ஒரு தெய்வ புருஷன். ஆபிரகாமின் மரபில் தோன்றினவர். அவரைப் போலவே இவரும் தெய்வ வாக்குக்கு இணங்கி ஆத்மீக சீவியத்தில் வீரம் வாய்ந்து விளங்கினவர். இராசாக்களோடும் பிரபுக்களோடும் சத்தியத்துக்கென்று எதிர்த்து நின்றவர். இவருடைய சொல்லுக்கும் செயலுக்கும் உண்டான வல்லமை இவருக்கு தெய்வத்தினிடம் கிடைத்த அருள்.

இவர் பிறக்கும் காலத்தில் ஆபிரகாமின் சந்ததி என்று சொல்லப்பட்ட இஸ்ரவேலர் எகிப்தில் அடிமைத் தனத்தில் வெகு பாடுபட்டுக் காலங் கழித்து வந்தார்கள். தொகுப்பில் ஆறு லக்ஷத்துக்கு அதிகமாயிருந்தார்கள். ஆனல் செய்யும் வேலை சாதாரணமாக மரம் வெட்டுகிறதும் செடிகல் அறுப்பதும்தான். சுயாதினம் இல்லை. அங்மைகளைப்போல கூலிவேலை செய்து எகிப்தியரால் ஒடுக்கப்பட்ட நிலைமையில் இருந்தார்கள்.

தங்கள் முன்னேரில் ஒருவரான யோசேப்பு என்பவர்எகிப்தின் பிரதானமந்திரிபதவிக்குஉயர்த்தப்பட்ட காலத்தில், இவர்கள் தங்கள் பிறந்தகமாகிய கானன் சீமையைவிட்டு, பஞ்சத்துக்குத் தப்ப இங்கே வந்து குடியேறினர்கள். வந்தவர்களின் தொகை எழுபதுதான். இவர்கள் ஆபிரகாமின் பேரனகிய யாக்கோபின் குடும்பத்தினர். யோ

சேப்பு யாக்கோபின் புத்திரர் பன்னிருவரில் ஒரு வர். இவர் எகிப்தின் அரசனுக அப்போ திருந்த ஒரு பார்வோனிடம் இவர்களுக்காகப் பேசி இவர்கள் ஆடுமாடுகள் வைத்து சீவனம்செய்தமையால் கோசேன் என்ற செழிப்புள்ள நாட்டில் இவர்கள் குடியேறும்படிச் செய்தார். யோசேப்பு மரித்தார். யோசேப்பை அறியாத வேறே பார்வோன் அரசர்கள் தோன்றினர்கள். இஸ்ரவேல் சனமும் தொகையில் லக்ஷக்கணக்காகப் பெருகிற்று. தங்களுக்கு இவர்களால் ஏதோ தீமையுண்டாகுமோ என்ற பயமும் எகிப்தியருக்கு உண்டாயிற்று. அவர்களை நெருக்கி ஒடுக்கினதற்கு இது ஒரு காரணம்.

ஆனல் முக்கிய காரணம் இவர்கள் தெய்வத்தை மறந்து உலகமக்களைப்போல சீவித்து வந்ததுதான். நானூறு வருஷங்களாயிற்று. அடிமைத்தனம் மாறவில்லை. தெய்வத்தை வழிபடும் ஒரு மனிதனும் இவர்கள் நடுவில் தோன்றவில்லை. அக்காலத்தில் மோசே தோன்றி, தெய்வத்துக்கு பயந்து நடந்தது பற்றியே இவர்கள். அடிமைத்தனம் மாறிற்று. இவர்களுக்கு விடுதலை கிடைத்தது. தெய்வமனிதனை மோசே இவர்கள் இரட்சகனுனர்.

இவர் யாகோபின் பன்னிரு புதல்வரில் ஒருவரான லேவியின் வமிசத்தில் தோன்றினவர். தகப்பன் அம்ராம் என்பவர், தாய் யோகபேத்து, அம்ராபின் தகப்பனின் சகோதரி. அக்கால முறைமையின்படி அவர்கள் விவாகம்செய்ய, அவர்களுக்கு

ஒரு பெண்ணும், ஆரோன் என்றும், மோசே என்றும் இரண்டு புதல்வரும் தோன்றினர்.

மோசே பிறக்கும் காலத்தில், இஸ்ரவேல் சனத்தில் தோன்றுகிற சகல ஆண்பிள்ளைகளையும் உடனே கொன்றுவிட வேண்டுமென்பது தேச அரசனின் கட்டளை. இஸ்ரவேலின் ஜனத்தொகையை அதிகரிக்கவிடாமல் செய்யவேண்டுமென்பது இக்கட்டளையின் நோக்கம். அநேக ஆண்பிள்ளைகள் கொல்லப்பட்டார்கள். சிப்பிராள் பூவாள் என்ற எபிரேய மருத்துவச்சிகளுக்கு இக்கட்டளை நேரில் கொடுக்கப்பட்டிருந்தது. ஆண்பிள்ளைகளை ஆற்றிலே எறிந்து கொன்று வந்தார்கள்.

ஆனல் மோசே பிறந்தபொழுது, அரசகட்டளையை மீறி, குழந்தையை மூன்று மாதகாலம் ஒளித்துவைத்து வளர்த்து வந்தார்கள். பிறகு ஒளித்தே வளர்ப்பது பெற்ரேருக்குக் கஷ்டமாயிருந்தது. ஆகவே ஒரு நாணற்பெட்டியில் பிசினும் கீலும்பூசி, அதிலே பிள்ளையை உயிரோடே வைத்து நீலநதியின் ஓரமாக நாணலுக்குள்ளே வைத்தார்கள். என்ன நடக்கப்போகிறதென்று பார்ப்பதற்காக குழந்தையின் தமக்கை தூரத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தாள்.

அச்சமயத்தில் பார்வோனின் குமாரத்தி நதியில் ஸ்நானம்பண்ணவந்தாள். தாதிகளும் கூட இருந்தார்கள். அழுகிற குழந்தையின் சத்தத்தைக்

கேட்டு அதை நாணற்பெட்டியோடே கொண்டு வரச்சொன்னாள். அது எபிரேய குழந்தை என்பது தெரியும். ஆனால் அதை வளர்க்கவேண்டுமென்ற பிரியம் அவளுக்கு ஏற்பட்டது. இதைப் பார்த்துக்கொண்டிருந்த தமக்கை ஓடிவந்து இதை வளர்க்க ஆள் வேண்டுமாவென்று கேட்டு, பிள்ளையின் தாயையே கூட்டிக்கொண்டு வந்தாள். அரசகுமாரத்தி அவளிடம் பிள்ளையைக் கொடுத்து அதைத் தனக்கென்று வளர்க்கும்படிக்கு உத்தரவிட்டாள். பிள்ளை சற்றுப் பெரிதானதும் இராச அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டு இராசகுடும்பத்தின் பிள்ளையாக சகல ஞானத்திலும் அறிவிலும் வளர்க்கப்பட்டு வந்தது.

மோசே இராச அரண்மனையில் வளர்ந்தாலும், தன் சனமாகிய இஸ்ரவேலர் அடிமைத்தனத்தில் இருப்பதைத் துக்கத்தோடு கவனித்துவந்தார். அரண்மனையின் வாழ்வும், மேன்மையும் அவருக்கு ஒரு பொருளாக இல்லை. தன் சனத்துக்கு உதவி செய்ய வேண்டுமென்பதே அவருடைய மூக்கிய நோக்கமாக விருந்தது. ஒருமுறை ஒரு எபிரேயனும் ஒரு எகிப்தியனும் சண்டைசெய்வதை இவர் கவனித்து எபிரேயனுக்கு உதவிசெய்து எகிப்தியனைக் கொன்று அவனைத் தரையில் புதைத்துவிட்டார். தன் சனத்தை உபத்திரவிக்கும் எகிப்தியரின் மேலுள்ள கோபம் இதற்குக் காரணம். இது ஒருவருக்கும் தெரியாது என்று நினைத்திருந்தார். இன்னொருமுறை இவர் இரண்டு எபிரேயர் சண்டை செய்வதைக் கவனித்து அவர்களுக்குள் சமாதானம்

உண்டுபண்ண நினைத்தார். அப்போது அவர்களில் ஒருவன் இவரை எதிர்த்து உன்னை எங்கள் மேல் நியாயாதிபதியாக ஏற்படுத்தினது யார்? அன்று எகிப்தியனைக் கொன்றதுபோல இன்றைக்கும் கொல்ல நினைக்கிறாயோ என்று சத்தமிட்டான். தான் எகிப்தியனைக் கொலைசெய்தது வெளியாகி விட்டதே, இது அரசனுக்கும் தெரிந்தால் தன்னைக் கொன்று விடுவானேயென்று பயந்து அரண்மனையை விட்டு ஓடிப்போய் மீதியான் என்றவனுந்தரத்திற்கு வந்து சேர்ந்தார். அது சீனாய் தீபகர்ப்பத்திலுள்ளது.

அங்கே ஒரு கிணற்றடியில் உட்கார்ந்திருந்தார். தற்காலத்தைப்போல அக்காலத்திலும் கிணற்றில் தண்ணீர் எடுப்பதைக் குறித்து வாக்குவாதம் உண்டாகும். கிணறுகளைச் சிலர் வெட்டி தாங்கள் கிணறுகளுக்குச் சொந்தக் காரரானபடியால் மற்றவர்களுக்குத் தண்ணீர் கொடுக்காமல் மறுப்பார்கள். மீதியான் தேசத்து ஆசாரியனான எத்ரோவின் குமாரத்திகள் ஏழுபேர் தங்கள் தகப்பனுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் காட்ட அக்கிணற்றண்டை அச்சமயத்தில் வந்தார்கள். சாதாரணமாக மற்ற ஆடு மேய்ப்பவர்களுக்கும் இவர்களுக்கும் தண்ணீர் காட்டும் சமயத்தில் வாக்குவாதம் உண்டாகும். தண்ணீர் காட்ட நேரமுமாகும். அந்த தினத்தில் மோசே அப்பெண்களுக்கு சார்பாக நின்று சீக்கிரத்தில் அவர்களுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி அவர்களை வீட்டுக்கு அனுப்பி விட்டார். இவ் விஷயத்தை அவர்கள் தகப்பனு

கிய எத்ரோ கவனித்து அவரை அழைத்துவரச் சொல்லி அவரைத் தம் வீட்டிலேயே தங்கும்படி ஏற்பாடு செய்தார். நாளடைவில் மோசே எத்ரோவின் மூத்தகுமாரத்தியாகிய சிப்போராளை விவாகம் செய்தார். அவர் மீதியான் வனாந்தரத்தில் தம் மாமனாரின் ஆடுகளை மேய்த்துக் காலங்கழித்தது நாற்பது வருஷங்கள்.

அப்படியே தம் காலத்தைக் கழித்துவிடலாமென்றிருந்தாலும், தம் சனம் அடிமைத் தனத்தில் இருப்பது அவர் மனதுக்கு வியாகுலத்தை உண்டாக்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஏனென்றால் அவருக்கு அப்போது பிறந்த தம் புதல்வனுக்கு கெர்ஷோம் அதாவது 'அந்நியதேசத்தில் அந்நியனாக இருக்கிறேன்' என்று பெயரிட்டார். தம் சனத்துக்கு உதவிசெய்யாமல் தனியே அந்நியதேசத்தில் காலங்கழிப்பது அவர் மனதுக்குத் துக்கமாயிருந்தது. இப்படியிருக்க திடீரென்று ஒருநாள் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த சமயத்தில் ஒரு முட்செடியில் அக்கினிபற்றி எரிந்தது. ஆனால் முட்செடி எரிந்துபோகாமல் பச்சையாகவே இருந்தது. இதைக் கவனித்துப்பார்க்க மோசே சமீபித்து வந்தார். அப்போது முட்செடியிலே இருந்து 'மோசே மோசே' என்று ஒரு சப்தம் பிறந்தது. மோசே 'இதோ அடியேன்' என்றார். அப்போது அந்த சப்தம் 'கிட்டிச் சேராதே. உன் கால்களில் இருக்கிற பாதரக்ஷையைக் கழற்றிவிடு; ஏனென்றால் நீ நிற்கிற ஸ்தலம் பரிசுத்தமானது' என்று உரைத்தது. மேலும் அது 'நான் உன்

பிதாக்களின் தேவனுகிய ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு என்பவர்களின் தேவன். என் சனமாகிய இஸ்ரவேலின் சப்தம் எனக்கு எட்டிற்று. நான் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிய கானுன் தேசத்துக்குக் கொண்டுபோவேன். நீ அவர்களுக்காக பார்வோனிடத்தில் பேசு' என்றது. அப்போது மோசே 'தைரியமற்றவனுக நான் எப்படிப் பார்வோனிடம் போகிறது. நான் சொல்லுவதை அவன் கேட்கமாட்டானே' என்ருர். அப்போது தேவன் நீ அவர்களை மீட்டுவருவாய். இந்த மலையிலேயே, நீங்கள் என்னைப்பணிந்து கொள்ளுவீர்கள். இது உனக்கு அடையாளமாயிருக்கும் என்ருர். மறுபடியும் மோசே சனத்தாரண்டை நீர் என்னை அனுப்பினீர் என்று நான் சொன்னுலும், அவர்களும் என்னை 'அவர் யார்' என்பார்கள். நான் என்ன சொல்லுகிறது என்ருர். அப்போது தேவன் 'நான் இருக்கிறவராகவே இருக்கிறேன். இருக்கிறேன் என்பவர் என்னை அனுப்பினுரென்று சொல்லு. சனத்தில் மூப்பரானவர்களை அழைத்து இவ்விஷயத்தை அவர்களிடம் சொல்லு. அவர்கள் உன் வார்த்தையை அங்கீகரிப்பார்கள். அவர்களோடு பார்வோனிடம் சென்று சனத்தைப் போகவிடச் சொல்லு. அவன் இணங்கமாட்டான். என் வல்லமையின் கரத்தினுல் அவனையும் அவன் சனமாகிய எகிப்தியரையும் நான் தண்டிப்பேன். அப்போது அவன் உங்களைப் போகவிடுவான்' என்ருர்.

அப்போது மோசே சனத்தின் மூப்பரும் என்னை நீர் அனுப்பினீர் என்று நம்பமாட்டார் களே என்றார். அப்போது தேவன் உன்கையில் இருக்கும் கோலைக் கீழே போடு என்றார். மோசே அதைக் கீழே போட்டபோது அது ஒரு பாம்பா யிற்று. மோசே பயந்து ஓடினார். தேவன் உன் கையைநீட்டி அதின் வாலைப்பிடி என்றார். மோசே பிடித்தபோது அது திரும்பவும் ஒரு கோலாயிற்று. தேவன் மோசேயை நோக்கி உன்கையை உன் மடியிலே போடு என்றார். அவன் அப்படிச் செய்த போது அது வெண்குஷ்டம் பிடித்த கை போலாயிற்று. மறுபடியும் அதை உன் மடியிலே போடு என்றார். அவன் போட்டதும் அது முன் போலச்சுகமுள்ள கையாகமாறிற்று. இந்த இரண்டு அடையாளங்களையும் அவர்கள் நம்பாமல் போனால் அப்போது நீலநதியின் தண்ணீரை மொண்டு அவர் கள் முன்பாகத் தரையிலே ஊற்று. அப்போது அது இரத்தமாக மாறும் என்றார்.

அப்போதும் மோசே சனத்திடம் போக மனதில்லாதவராக சாக்குப்போக்குச் சொல்ல எண்ணி, நான் திக்குவாயனுயிற்றே வேறே யாரை யாகிலும் அனுப்பும் என்றார். தேவன் மோசேயை நோக்கி மனிதருக்கு நாவைக் கொடுத்தது யார்? நான் உனக்கு நீ பேசவேண்டிய வார்த்தைகளை உன் வாயிலே கொடுப்பேன். உன் சகோதரனுகிய ஆரோன் உன்னைச் சந்திக்க வருகிறன். அவனிடம் யாவற்றையும் சொல்லு. அவன் உனக்கு வாயாக இருப்பான். நீ அவனுக்குத் தெய்வத்தைப்போல

இரு. இந்தக் கோலையும் எடுத்துக்கொள். அதை வைத்துக்கொண்டு அநேக பலத்த காரியங்களை அற்புதமாக நீ செய்வாய் என்றார்.

அப்போது மோசே தேவன் சொன்னபடியே ஆரோனையும் அங்கு சந்தித்தார். அவரிடம் சகல விஷயங்களையும் அவர் அறிவித்தார். தம் மாமனாகிய எத்திரோவிடமும் விடைபெற்றுக்கொண்டு, பிரயாணம்செய்து எகிப்துவந்து சேர்ந்தார்கள். சனத்தின் மூப்பரிடமும் சனத்திடமும் அடையாளங்களைக் காண்பித்துத் தேவன் அவர்களுக்கு விடுதலைகொடுத்துக் கானான் தேசத்துக்குக் கூட்டிக்கொண்டு போவார் என்று அறிவித்தபோது, சனங்கள் அவர் வார்த்தையை நம்பித் தங்கள் தலைகளை வணங்கி தேவனைத் தொழுதுகொண்டார்கள்.

மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் சென்று எங்கள் சனங்களைப் போகவிடும், நாங்கள் மூன்றுநாள் பிரயாணம் செய்து வனாந்தரத்துக்குள் சென்று எங்கள் கர்த்தரைத் தொழுது கொள்ளவேண்டும் என்றார்கள். பார்வோனோ அவர்கள் வேண்டுகோளை மறுத்ததுமின்றி இஸ்ரவேல் சனத்தை இன்னும் ஒடுக்க ஏற்பாடு செய்தான். அவர்கள் மேல் அதிகாரிகளைக் கூப்பிட்டு, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய வைக்கோலைக் கொடுக்கவேண்டாம். அவர்களே அலைந்து திரிந்து தாங்கள் செங்கல் சுடுவதற்கு வேண்டிய குப்பை கூளங்களைப் பொறுக்கிக் கொள்ளட்டும். ஆனால் சுட்டுக்காண்பிக்க வேண்டிய செங்கல்கள் மாத்திரம் தினம் கணக்கில் குறையா

திருக்கட்டும் என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டான். தங்களுக்குத் தேவன் விடுதலை கொடுப்பார் என்று எண்ணியிருந்த சனங்கள் தாங்கள் படும் கஷ்டத்தினால் இப்போது மோசேயிடமும் ஆரோனிடமும் சென்று அவர்கள் நிமித்தம் தங்களுக்குண்டாயிருந்த கஷ்டம் அதிகரித்து விட்டது என்று முறையிட்டார்கள். மோசே கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணி, நீர் சொன்னபடி சனத்துக்கு விடுதலையும் கிடைக்கவில்லை, கஷ்டமும் முன்பு இருந்ததைப் பார்க்கிலும் இப்போது அதிகரித்துவிட்டது. என்னை ஏன் அனுப்பினீர் என்று கூக்குரலிட்டார்.

அப்போது கர்த்தர் நாம் ஏகோவா, ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு என்ற இந்த சனத்தின் முற்பிதாக்களோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறோம். இந்த சனத்தின் துயரமும் நமக்குத் தெரியும், நாம் இந்த சனத்தை நமது பலத்த கரத்தினால் விடுவிப்போம். நீயும் ஆரோனும் பார்வோனிடம் சென்று சனத்தைப் போகவிடச் சொல்லு. அவன் யாதொரு அடையாளத்தைக் கேட்டால் உன் கோலைத் தரையிலே போடு அது சர்ப்பமாகும் என்றார். அவர்கள் பார்வோனிடம் சென்று பேசினபோது அவன் ஒரு அடையாளத்தை எனக்குக் காண்பியுங்கள். அப்போது தேவன் உங்களை அனுப்பினார் என்று நம்புவேன் என்றான். மோசே தம் கையில் வைத்திருந்த கோலைத் தரையிலே போட்டார். அது ஒரு சர்ப்பமாயிற்று. அரண்மனையில் வந்திருந்த குறி சொல்லுகிறவர்களையும்

மந்திரக்காரரையும் பார்வோன் பார்த்து இதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்றான். அவர் கள் தங்கள் கோல்களையும் மந்திர சக்தியினால் பாம்புகளாக்கினார்கள். மோசேயின் கோலிலிருந்து உண்டான சர்ப்பம் மற்றவைகளையெல்லாம் விழுங்கி விட்டது. பார்வோன் இதைப் பார்த்தும் மனம் இணங்கவில்லை. அவன் மனம் கடினப்பட்டது.

கர்த்தர் மறுபடியும் மோசேயோடே, நீ பார் வோனுக்கு முன்பாகச் சென்று அவன் நதியண்டை வரும்போது இதோ நதியின் தண்ணீரை இரத்த மாக மாற்றுகிறேன் என்று சொல்லி உன் கோலி னாலே நதியின் தண்ணீரை அடி; அப்போது அது இரத்தமாக மாறிப்போகும். தண்ணீரிலுள்ள மீன் முதலியன செத்துத் தண்ணீரும் நாற்றம் எடுத் துப்போகும் என்று சொல்லியிருந்தார். மோசேயும் தம் கோலைக் குளம், கிணறு, குட்டை எல்லாவற்றின் மேலும் நீட்ட, எல்லாம் இரத்தமாக மாறிவிட்டது. பார்வோன் தன் மந்திரவாதிகளிடம் சொல்ல, அவர்களும் தங்கள் மந்திர சக்தியினால் தண்ணீரை இரத்தமாக மாற்றினார்கள். எகிப்தின் சனம் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் ஆற்றின் பக் கத்தில் நீரூற்றுகள் தோண்டினார்கள். இப்படித் தண்ணீர் எல்லாம் இரத்தமாக மாறி ஏழு நாட்கள் இருந்தன. இப்படி இருந்தும் பார்வோனின் மனம் மாறவில்லை.

சிறிது காலம் சென்றது. மறுபடியும் கர்த்தர் மோசேயை நோக்கி நீ பார்வோனிடம் சென்று நீர் என் சனத்தைப் போகவிடாமல் இருப்பீரானால் தவளைகளைக்கொண்டு உம்மை வாதிப்பேன்.

அவைகள் உம் வீடு நிறைய, படுக்கைகளிலும், அடுப்பிலும், மாவு பாத்திரங்களிலும் வந்து உபத்திரவப்படுத்தும் என்று சொல் என்றார். பார்வோன் மோசேயுக்கு இணங்கவில்லை. கர்த்தர் மோசேயிடம் உன் கோலைத் தண்ணீர்களின் மேல் நீட்டு என்றார். அப்போது தவளைகள் ஏராளமாக வந்து எகிப்தியர்களின் வீடுகளை நிரப்பிற்று. உபத்திரவம் தாங்கமாட்டாமல் பார்வோன் மோசேயைக் கூப்பிட்டு, இந்த வாதையை நீக்கிவிடும் நான் உம் சனத்தை அனுப்பிவிடுகிறேன் என்றான். மோசே கர்த்தரிடம் வேண்டிக் கொண்டார். அப்போது தவளைகள் செத்தன. அவைகளின் நாற்றம் தேசத்தை நிரப்பிற்று. வாதை ஒழிந்தது. ஆனால் பார்வோன் தன் மனதைக்கடினப்படுத்தி சனத்தை விடுதலை செய்ய மறுபடியும் மறுத்தான்.

இப்படிப் பார்வோனின் நிமித்தம் எகிப்தியருக்கு உண்டான வாதைகள் அநேகம். தவளைகளுக்குப் பிறகு பேன்களால் வாதையுண்டாயிற்று. பிறகு வண்டுகளால் வாதை உண்டாயிற்று. பிறகு எகிப்தியரின் ஒட்டகங்கள், குதிரைகள், ஆடு, மாடு யாவற்றிற்கும் ஒருவித விஷக் காய்ச்சல் உண்டாயிற்று. எகிப்தியரின் ஆடு மாடுகள் வெகுவாய் இறந்தன. பிறகு கர்த்தர் மோசேயை நோக்கி சூளையின் சாம்பலைக் கையிலெடுத்துத் தேசத்தை நோக்கி இறை யென்றார். அப்படி மோசே இறைத்த பொழுது மனிதர், மிருகங்கள் யாவற்றின் மேலும் எரி கொப்புளங்கள் உண்டாயின. பிறகு கர்த்தர் இடி முழக்கத்தோடு ஒரு கல் மழையைப்

109435

பெய்யச் செய்தார். அதனால் மனிதர், மிருகங்களுக்கு மாத்திரமல்ல, தாவரங்களுக்கும் மிகச் சேதம் உண்டாயிற்று. ஆனால் கன்மழை இஸ்ரவேலர் தங்கியிருந்த கோசேன் சீமையில் மாத்திரம் பெய்யவில்லை. பார்வோனின் மனது இன்னும் அதிகமாகக் கடினப்பட்டது. அப்போது கர்த்தர் கிழக்கிலிருந்து ஒரு பெரிய காற்றை வரப்பண்ணினார். அந்தக் காற்றிலே வெட்டுக்கிளிகள் மேகத்தைப் போல வந்து தேச முழுவதையும் நிரப்பிற்று. கல்மழைக்குத் தப்பின பச்சை யாவற்றையும் வெட்டுக்கிளிகள் நாசம் பண்ணின. மேலும் வீடுகளிலும், வெட்டுக்கிளிகளின் உபத்திரவம் அதிகமாயிருந்தது. அப்போது பார்வோன் இணங்கினவனைப் போல் காணப்பட்டான். மோசே கர்த்தரிடம் வேண்டிக் கொள்ள, வெட்டுக்கிளிகளின் வாதையும் நீங்கிற்று. என்றாலும் பார்வோன் இஸ்ரவேல் சனத்தைப் போகவிடவில்லை. அப்போது கர்த்தர் ஒரு காரிருளைத் தேசத்தின் மேல் வரப்பண்ணினார். அவ்விருள் மூன்று தினம் தங்கியிருந்தது. அப்போது பார்வோன் மோசேயைக் கூப்பிட்டனுப்பி, நீங்கள் யாவரும் போகலாம், ஆனால் உங்கள் ஆடுமாடுகளை இங்கேயே விட்டுப்போங்கள் என்றான். மோசேயோ பார்வோனை நோக்கி மாட்டின் ஒரு குளம்பு முதலாக நாங்கள் விட்டு போவதில்லை என்று தீர்மானமாயுரைத்தார். அப்போது பார்வோன் கோபமூண்டு என் முகத்தை இனிமேல் பாராதேயும் என்று சொல்லி அவரை அனுப்பிவிட்டான்.

பிறகு கர்த்தர் மோசேயைக் கூப்பிட்டு நாம் எகிப்தியரின் தலைச்சன்களை சங்காரம் செய்யப் போகிறோம். நீ இஸ்ரவேல் சனத்திடம் அவர்களில் ஒவ்வொரு குடும்பமும் பழுதற்றதும், ஒரு வயதுக்கு அதிகப் படாததுமான ஆட்டுக்குட்டி ஒன்றை மாதத்தின் பத்தாம் தேதியன்று தெரிந்தெடுத்து, பதினான்காம் தேதியன்று அதைக் கொன்று அதின் இரத்தத்தைத் தங்கள் வீடுகளின் வாசற்கால்களில் பூசச் சொல்லு. சங்காரத்தூதன் அன்றிரவு வரும் போது அந்த இரத்தம் அவனுக்கு அடையாளமாயிருக்கும். இரத்தம் பூசப்பட்ட வீடுகளைக் கடந்து சென்று இரத்தம் பூசப்படாத எகிப்தியர்கள் வீடுகள் ஒவ்வொன்றிலும் உட்சென்று அங்கிருக்கும் தலைச்சன்கள் யாவற்றையும் அச்சங்காரத்தூதன் கொன்று போடுவான். இஸ்ரவேல் சனம் எல்லாம் தங்கள் கச்சைகளைக் கட்டினவர்களாகவும், தங்கள் பாதரட்சைகளைத் தங்கள் கால்களில் தொடுத்தவர்களாகவும் தங்கள் ஆகாரத்தைச் சாப்பிட்டுப் புறப்பட ஆயத்தமுள்ளவர்களாயுமிருக்க வேண்டும். புதிதாகச் செய்யப்பட்ட மாவினால் அடைகளைச் சுட்டு அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியின் இறைச்சியோடும் கசப்பான கீரைகளோடும் அந்த இரவு ஆகாரத்தைச் சாப்பிட்டு, பிரயாணத்துக்கு ஆயத்தப்பட்டவர்களாக இருக்க வேண்டும். புளிப்பான மா அவர்கள் வீட்டில் காணப்படக்கூடாது என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டார். புளிப்பு மா நம்மிலுள்ள பாவத்துக் அடையாளம். சங்காரத்தூதன் அணுகாதபடி நம்மிலுள்ள பாவங்களை நாம் விட்டு விலகு

வது ஞானம். அப்படியே அவர்கள் ஆயத்தமாயிருந்த சமயத்தில் நடு இரவில் சங்காரத் தூதன் இறங்கி எகிப்தியரின் தலைச்சன்கள் யாவரையும் சங்காரம் செய்தான். தேசமெல்லாம் கூக்குரல் உண்டாயிற்று அப்போது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் கூப்பிட்டனுப்பி உங்கள் சனத்தைக் கூட்டிக் கொண்டு உடனே தேசத்தை விட்டுப் புறப்படுங்கள் என்று துரிதப்படுத்தினான். சனமும் புறப்பட்டது. இஸ்ரவேலில் ஆண்கள் மாத்திரம் ஆறு லக்ஷம். மோசே இஸ்ரவேல் சனம் அனைத்தையும் கூட்டிக் கொண்டு எகிப்தை விட்டுப் புறப்பட்டார்.

கர்த்தர் மோசேயிடம் இரண்டு காரியங்களைக் குறித்து வற்புறுத்திப் பேசினார். முதலாவது அவர்களுக்கு விடுதலை கிடைத்த அந்தத் தினத்தை அவர்கள் வருஷா வருஷம் ஒரு பண்டிகையாக ஆசரிக்க வேண்டியது. இரண்டாவது எகிப்தின் தலைச்சன்கள் சங்கரிக்கப்பட்டதை நினைவு கூர இஸ்ரவேலின் சகல தலைச்சன்களையும் கர்த்தருக்குப் பிரதிஷ்டை செய்யவேண்டியது. மோசேயும் இவ்விரண்டு விஷயங்களையும் யாவரும் தவறாமல் அநுசரிக்க ஏற்பாடு செய்தார்.

பிறகு கர்த்தர் மோசேயுக்கு அவர் போக வேண்டிய வழியைக் காண்பித்தார். அது வடகிழக்காக ஏத்தாம் என்ற வனாந்தரத்தின் வழியாகச் செங்கடலின் வட பக்கத்துக்குச் சென்றது. வனாந்தரத்தில் சனம் தங்கினபோது ஒரு பக்கம் வனாந்தரம், மற்றொரு பக்கம் உயரமான மலைகள், எதிரே செங்

கடலின் ஒரு பாகம். தற்சமயம் சூயேஸ் கால்வாய் இருக்கும் பக்கங்களிலிருந்த ஏரிகள் என்று சில சரித்திர ஆராய்ச்சி செய்வோர் எண்ணுகிறார்கள். பார்வோனுக்கு இஸ்ரவேல் மக்களைப் பின் தொடர்ந்து எப்படியாகிலும் அவர்களைக் கொன்று விடவேண்டுமென்று எண்ணம். தன் இரதங்கள் சேனைகள் யாவற்றையும் கூட்டிக்கொண்டு மக்களைப் பின்தொடர்ந்தான். அவன் நெருங்கி வருகிறதை மக்கள் கண்டபோது அவர்கள் மோசேயை நோக்கி எங்களை வனாந்தரத்துக்கு இரையாக்கவா கொண்டு வந்தீர் என்று கூக்குரலிட்டார்கள். மோசேயோ கர்த்தர் பேரில் நம்பிக்கையுள்ளவராக மக்களைத் தைரியப்படுத்திக் கர்த்தர் உங்களைத் தமது பலத்த கரத்தால் மீட்டுவிடுவதைக் காண்பீர்கள் என்று உறுதி வார்த்தை கொடுத்தார். கர்த்தர் தம்மை நம்பினவர்களைக் கைவிடுவாரோ? அவர் மோசேயை நோக்கி உன் கோலைச் சமுத்திரத்தின் மேல் நீட்டு என்றார். மோசே கோலை நீட்டினார். அப்போது தண்ணீர் பிரிந்து இஸ்ரவேல் மக்கள் நடந்து போகத்தக்கதாக வழிவிட்டது. இஸ்ரவேல் மக்கள் தண்ணீரைக் கடந்தனர். பார்வோனும் தன் இரதங்களை விட்டுக் கொண்டு சனத்தைப் பின் தொடர்ந்தான். கர்த்தர் மோசேயை நோக்கி உன் கோலைத் திரும்பச் சமுத்திரத்தின் மேல் நீட்டு என்றார். அவர் அதை நீட்டினார். அப்போது தண்ணீர் வந்து மூடிற்று. பார்வோனும் அவன் சேனையும் அத்தோடு மாண்டது. மோசே கர்த்தருடைய மகத்துவத்தைப் புகழ்ந்து பாடினார். மோசேயின்

சகோதரி மீரியாம் இஸ்ரவேலின் ஸ்திரீகளோடு கடனம் செய்து தம்பூருக்களோடுக் கர்த்தரைத் துதித்து மோசேயிக்குப் பின் சென்ருள். கர்த்தர் அவர்களைப் பகலில் மேக ஸ்தம்பமாகவும், இராவில் அக்கினி ஸ்தம்பமாகவும் கூடவிருந்து வழி நடத்தினர்.

சில நாட்களுக்குள் சூர் என்ற வனாந்தரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை. மாரா என்ற இடத்திற்கு வந்தபோது அங்கே தண்ணீர் கசப்பாக இருந்தது. சனம் மோசேயுக்குவிரோதமாக முணுமுணுத்தது. மோசே கர்த்தரிடம் சனத்தின் கஷ்டத்தைத் தெரிவித்தார். கர்த்தர் அங்கே ஒரு மரத்தைக் காட்டி அதை வெட்டித் தண்ணீரில் போடு, அப்போது அது குடிக்கும் சலமாகுமென்ருர். அப்படியே அதை வெட்டிப் போட்டார்கள். தண்ணீர் குடிக்கத் தகுந்ததாயிற்று. எபிரேய பாஷையில் மாரா என்பதற்குக் கசப்பு என்று அருத்தம். ஏலீம் என்ற இடத்துக்கு வந்தார்கள். அங்கே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்ச மரங்களும் இருந்தன. சனம் சிலநாட்கள் அங்கு தங்கிப் பிற்பாடு புறப்பட்டார்கள்.

அவர்கள் சீன் என்ற வனாந்தரத்துக்கு வந்தபோது அவர்களுக்குச் சாப்பிட ஒன்றும் கிடைக்கவில்லை. சனத்தில் மறுபடியும் முணுமுணுப்புண்டாயிற்று. எகிப்தில் இருந்தபோது சனங்கள் தங்களுக்குக் கிடைத்த இறைச்சி முதலியவற்றை நினைத்து மோசேயின் வார்த்தையைக் கேட்டு எகிப்

திலிருந்து புறப்பட்டு வந்தது பிசகு என்று எண்ணி மோசேயுக்கு விரோதமாகக்கலகம் பண்ணினார்கள். மோசே இக்காரியத்தைக் கர்த்தரிடம் தெரிவித்த போது, கர்த்தர் சனம் சாப்பிட ஒவ்வொரு சாயந்தரமும் இறைச்சியும், ஒவ்வொரு காலையிலும் மன்னாவும் வருஷிக்கப் பண்ணுவதாக வாக்குக் கொடுத்தார். சாயந்திரங்களில் காடைகள் ஏராளமாய் வந்து இறங்கின. காலை வேளைகளில் கொத்தமல்லி அளவும், வெண்மை நிறமும் தித்திப்புமுள்ள தானியம் போன்ற ஒரு வஸ்து வானத்திலிருந்து விழுந்து அவர்கள் பாளையத்தை நிரப்பிற்று. ஓமர் என்று சொல்லப்பட்ட அவர்களுடைய அளவு படியினால் ஒன்று அவர்களில் ஒவ்வொருவரும் அவற்றில் சேகரித்துக் கொள்ள வேண்டியது. அதிகம் சேகரித்தால் அதில் புழுக்கள் உண்டாகி அது கெட்டுப் போகும். வெள்ளிக்கிழமை மாத்திரம் இரண்டு ஓமர் சேர்த்துவைக்க வேண்டுமென்பது அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை. அடுத்த நாள் சனிக்கிழமை ஓய்வு நாளானபடியால் அன்று அது விழாது. சனமும் ஓய்ந்திருக்க வேண்டியது. இதை மோசே சனத்துக்கு அறிவித்தபோது அவர்களுக்கு அதிக சந்தேகம். ஆனால் காலை வேளைகளில் அந்த தானியம் போன்ற வஸ்துவை சனம் கண்டதும் அவர்கள் மன்னா அதாவது அவர்கள் பாஷையில் 'இது என்ன' 'இது என்ன' என்று கேட்டுக் கொண்டே அவற்றைப் பொறுக்கினார்கள். கட்டளைக்கு விரோதமாக அதிகம் சேர்த்தவர்களும் உண்டு. ஆனால் அவை புழு வைத்ததினால் அதிகம்

சேர்த்தும் அது பிரயோசனமற்றிருந்தது. குறையச் சேர்த்தவனுக்கும் அது குறைபடவில்லை அதிகம் சேர்த்தவனுக்கும் அது அதிகப்படவுமில்லை. மன்னா வின் மூலமாக இந்தப் பெரிய பாடம் இஸ்ரவேல் சனத்துக்குக் கற்பிக்கப்பட்டது.

பிறகு ரெபிதீம் என்ற இடத்துக்கு வந்தார்கள். அங்கேயும் அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் இல்லை. பழைய சம்பவங்கள் யாவற்றையும் மறந்து விட்டுக் கர்த்தர் இங்கே இருக்கிறாரா இல்லையா வென்று சனம் முணுமுணுத்து மோசேயையும் கல் லெறிந்து கொன்று விடலாமாவென்று எண் ணிற்று. கர்த்தரிடம் மோசே சனம் கஷ்டப்படு வதைத் தெரிவித்தபோது அவர் ஓரேப் என்ற பர் வதத்தண்டை சனத்தின் மூப்பரை அழைத்துவர வேண்டுமென்றும் மோசேயுக்குத் தாம் அங்கே தரிசனம் கொடுப்போமென்றும், மோசே தம் கோலினால் அந்தப் பாறையில் சனத்தின் மூப்பரின் முன்பாக அடித்தால் அதிலிருந்து அற்புதமாகத் தண்ணீர் புறப்பட்டு ஒரு ஆறாக அங்கே சனத் தண்டை ஓடி வருமென்றும் அறிவித்தார். மோசே சனத்தின் மூப்பரைக் கூட்டிக் கொண்டுபோன போது கர்த்தர் ஓரேப் பர்வதத்தின் மேல் நிற்கிற வராகத் தம்மைக் காண்பித்தார். அப்போது மோசே கோலை ஓங்கிப் பாறையை அடித்தார். அங் கிருந்து அற்புதமாக மூப்பர் பார்க்கத் தண்ணீர் ஊற்றுப் புறப்பட்டு ஒரு ஆறுபோல் சனத்தண்டை ஓடி வந்தது. சனத்துக்குத் தண்ணீர் கிடைத்தது. சனம் கர்த்தர் இருக்கிறாரா இல்லையா வென்று

கேட்டதினாலும், சனம் கர்த்தரால் கடிந்துகொள்ளப் பட்டதாலும், அந்த இடத்துக்கு எபிரேய பாஷை யில் மாசா, மரிபா என்று பெயர் கொடுக்கப்பட்டது. சனம் அங்கே வெகுநாள் தங்கியிருந்தார்கள்.

அக்காலத்தில் ஆமலேக் என்ற ஒரு சாதி அந்த வனாந்தரங்களில் சுற்றித் திரிந்து பிழைத்து வந்தது. அவர்கள் இஸ்ரவேல் சனம் தங்கள் பிழைப்புக்கு இடையூருக இருப்பார்களென்று நினைத்து, அவர் களோடு யுத்தத்துக்கு வந்தார்கள். மோசே தமக்கு உதவியாயிருந்த யோசுவா என்பவரைக் கூப்பிட்டு சனத்தில் யுத்தத்துக்கு ஏற்றவர்களைத் தெரிந்து கொண்டு ஆமலேக்கியரோடு யுத்தம் செய்யும் என்று கட்டளை யிட்டார். மோசே மலையின் உச்சியில் சனத்தின் வெற்றிக்காகக் கர்த்தரிடம் செபித்துக் கொண்டிருந்தார். அவருடைய இரண்டு கரங்களும் உயர்த்தப்பட்டிருந்தன. அவருடைய கரம் தாழும் போது இஸ்ரவேல் சனத்தின் பலம் தாழ்ந்தது. அவருடைய கரம் உயர்ந்தபோது இஸ்ரவேலின் பல மும் உயர்ந்தது. அவருடைய கரங்களைத் தாங்கி நிற்க ஒருபுறம் ஆரோனும் மற்ரொருபுறம் ஊரும் நின்ருர்கள். ஊர் என்பவர் மீரியாமின் கணவ னென்றும் சிலர் நினைக்கிருர்கள். மோசேயின் கரத்தில் அந்தக் கோலும் இருந்தது. கடைசியாக இஸ்ரவேல் வெற்றி கொண்டது. ஆமலேக்கியர் தோற்று முறியடிக்கப்பட்டார்கள். கர்த்தரின் கட் டளைப்படி மோசே அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு எகோவா நிசி அதாவது 'எகோவா எங்கள் கொடி' என்று பெயரிட்டார்.

மோசே சனத்தோடு அங்கே தங்கியிருப்பதைக் கேள்விப்பட்டு மோசேமாமனுராகியஎத்ரோ, மோசேயின் மனைவியாகிய சிப்போராளோடும், கெர்ஷோம், எலியேசர் என்ற மோசேயின் இரண்டு பிள்ளைகளோடும் அவரைப் பார்க்க வந்தார். கெர்ஷோம் என்பதற்கு 'நான் அன்னிய தேசத்தில் அன்னியனுயிருந்தேன் என்பதுபோல, எலியேசர் என்பதற்கு என் பிதாக்களின் தேவன் என்னைப் பார்வோனின் பட்டயத்துக்குத் தப்புவித்தார்' என்று அருத்தம். மோசே காலையிலிருந்து சாயந்தரமட்டும் சனத்தின் வழக்குகளை விசாரித்து வந்ததைக்கண்டு, மோசேயிடம், பக்தியும், உண்மையுமுள்ளவர்களும் பண ஆசை அற்றவர்களுமான மூப்பரைத் தெரிந்தெடுத்து, சனத்தின்மேல், பத்துக்கொன்று, ஐம்பதுக்கொன்று, நூறுக்கொன்று ஆயிரத்துக்கொன்று இவ்வாருக வழக்கு விசாரிப்பதற்கு ஆட்களை ஏற்படுத்தும், முக்கியமான விஷயங்கள் மாத்திரம் உம்மண்டை வரட்டும், இல்லாவிட்டால் வேலையின் மிகுதியால் சோர்ந்து போவீர் என்பதாக எத்ரோ யோசனைகொடுத்தார். மோசேயும் அப்படியே மூப்பர்களை ஏற்படுத்தினர். மோசேயுக்கும் வேலை சற்று இலகுவாயிற்று. பிறகு எத்ரோ தம் இடத்துக்குத் திரும்பிவிட்டார்.

அங்கிருந்து புறப்பட்டு சீனய் வனாந்தர வழியாக சீனய் மலைக்கு வந்தார்கள். சனம் மலைக்கு எதிராக பாளையம் இறங்கிற்று. மோசே மலையின் மேல் ஏறிப்போய் கர்த்தரண்டை செபித்தார்.

கர்த்தர் மோசேயை நோக்கி நீ சனத்தண்டை சென்று நான் உங்களைக் கழுகு தன் குஞ்சுகளைத் தன் செட்டையில் தாங்கி வருவதைப்போல் தாங்கி வந்தேன், என் சப்தத்துக்கு நீங்கள் செவிகொடுத்துக் கீழ்ப்படிவீர்களேயானால் நீங்கள் என் சொந்தமான ஆசாரியக் கூட்டமும், நான் விசேஷித்துத் தெரிந்துகொண்ட பரிசுத்த சனமுமாயிருப்பீர்களென்று அவர்களிடம் சொல்லென்றார். மோசே சனத்திடம் இதை அறிவித்தபோது சனம் கர்த்தர் சொல்லுவது யாவற்றையும் தாங்கள் கைக்கொள்ளுவோம் என்றார்கள். மோசே அதைக் கர்த்தருக்கு அறிவித்தார். அப்போது கர்த்தர் மோசேயோடு இன்னும் மூன்று நாட்களுண்டு. இந்நாட்களில் சனம் தம்மைச் சுத்திகரித்துக் கொண்டு எல்லாவிஷயத்திலும் தீட்டுப்படாமல் தம்மைக் காத்துக்கொள்ளட்டும். மூன்றாம் நாளிலோ எக்காளத்தோடும், இடிகள் மின்னலோடும், அக்கினி மேகங்களோடும் நாம் சீனாய் மலையிலே வந்து இறங்குவோம், அப்போது உன்னோடு நாம் பேசுவதை சனம் கேட்கும். மலையின் அருகே சேராதபடி சனம் சாக்கிரதையாயிருக்கட்டும் என்றார். மூன்றாம் நாளிலே அப்படியே நடந்தது. மலைமுழுவதும் அக்கினிச் சூளையாக மாறிற்று. இடிமுழக்கமும் மின்னலும் அதிகரித்தது. மலையில் ஒரு அதிர்ச்சி உண்டாயிற்று. எக்காள சப்தத்தை சனம்கேட்டு, கண்டகாட்சியினால் நடுங்கிற்று. கர்த்தர் மோசேயை யழைத்தார். அவர் அச்சமயத்தில் பேசினது உலகத்துக்குக் கொடுக்கப்பட்ட பத்துக்

கற்பனைகள். அவைகள் பிரமாணங்களாக இஸ்ரவேல் சனத்துக்கு முதலாவதாகவும் அவர்கள் மூலமாக உலகத்துக்கும் கொடுக்கப்பட்டன. உன்னை மீட்டுவந்த கர்த்தர்தானே நம்மைத்தவிர வேறே தேவன் இல்லை. வானத்திலும், பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாகும் எந்த வஸ்துவுக்கும் ஒப்பாக ஒரு விக்கிரகத்தை நீ உண்டாக்கவும், அதை வணங்கவும் வேண்டாம் என்பது முதல் கற்பனை. இருதயத்தில் உணர்வில்லாதபடி வாயினால் மாத்திரம் தெய்வம், தெய்வம் என்பது தவறு. தெய்வத்தின் நாமத்தை ஒருவரும் வீணிலே வழங்கக் கூடாது. ஆறுநாட்கள் வேலைசெய்து வாரத்தின் கடைசிநாளிலே நீ ஓய்ந்திருப்பாயாக. அது கர்த்தருக்கென்று நியமிக்கப்பட்ட திருநாள். உனக்கு நன்மையுண்டாகிறதற்கும் நீ பூமியிலே நெடுநாள் வாழ்ந்திருப்பதற்கும் உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக. கொலை, களவு, விபசாரம் யாதொன்றையும் நீ செய்யாதிருப்பாயாக. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக. பிறனுடைய வீட்டையாகிலும், அவன் மனைவியையாகிலும், அவனுக்குண்டான மற்றெதையாகிலும் இச்சியாதிருப்பாயாகவென்பது மற்ற கற்பனைகள். இரண்டொன்று தவிர, மற்ற கற்பனைகளெல்லாம் இதை, அதைச் செய்யாதிருப்பாயாக வென்று கொடுக்கப்பட்டன. ஒரு இடத்தைச் செழிப்புள்ள ஒரு தோட்டமாக்க வேண்டுமானால், முதலில் அதைச் சுத்திசெய்து கல், முள் முதலியவற்றை அப்புறப்படுத்தி, பொல்லாத மனிதராலும், மிருகங்களாலும் அவ்விடம்

நாசமடையாதபடி வேலியிட்டுக் காப்பாற்ற நாம் முயற்சிசெய்வதுபோல மோசேயின் பிரமாணங்க ளைக் கொண்டு இன்னின்ன காரியங்களைச் செய்யா மல் நீ அவைகளுக்கு விலகியிரு என்று மாத்திரம் மோசேயிக்கு பிரமாணங்கள் கொடுக்கப்பட்டன. பிற்பாடு கிறிஸ்துவின் காலத்தில் தோட்டத்தில் நல்ல விதை விதைப்பதுபோல, எல்லாவற்றிற்கும் மேலாகத் தெய்வத்தை நம்பி,தெய்வத்தை நேசிக்க வேண்டுமென்றும், நம்மைப்போல் பிறரையும் நாம் நேசிக்கவேண்டுமென்றும் புதுக்கற்பனைகள் கொடுக்கப்பட்டன. கிறிஸ்து தம் சீவியத்தில் இப் புதுக் கற்பனைகளை நிறைவேற்றிக் காண்பித்தார். மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்ட பிரமா ணங்கள் சிநேக சீவியத்துக்கு அவசியமான பரி சுத்த முண்டாக்குவதற்கென்றே கொடுக்கப்பட் டன. பரிசுத்தமற்ற சிநேகம் சிநேகமாகாது. அது தெய்வத்துக்கு ஏற்றதல்ல. 'கண்ணுக்குக்கண், பல் லுக்குப் பல்' என்பது மோசேயின் கட்டளை. ஆனால் கிறிஸ்து உன் சத்துருவை சிநேகி, சபிக்காமல் அவனை ஆசீர்வதி, தெய்வம் பொல்லாதவர்களுக் கும் மழையையும், சூரியனையும் கொடுப்பதுபோல் தெய்வத்தன்மை பெற்ற யாவரும் பொல்லாப்பை நன்மையால் மாற்றவேண்டுமென்பது உன் பிரமா ணமாகட்டும் என்று பரிசுத்தத்துக்கு மேலான சிநேகத்தைப் பிரமாணமாக உலகத்துக்குக் கொடுத்தார். மோசேயின் பரிசுத்தப் பிரமாணங் கள் கிறிஸ்துவின் சிநேகப் பிரமாணங்களுக்கு ஒரு அரசபவனிக்கு முன்னனை ஒரு ஆயத்தம்போ லாயிற்று.

மோசேயுக்கு மலையிலிருந்தது பற்றித் தாமதமானதால், சனம் ஆரோனிடம் சென்று, மோசேயுக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை எங்களை வழிநடத்த எங்களுக்கு ஒரு தெய்வத்தை உண்டாக்குமென்று வேண்டிக்கொண்டார்கள். ஆரோனும் சனத்தின் உபத்திரவம் பொறுக்கமுடியாமல், அவர்களிடமிருந்த பொன் நகைகளைக்கொண்டு வரச்சொல்லி, அவைகளை உருக்கி, ஒரு பொன் கன்றுக்குட்டியை வார்ப்பித்து அவர்களுக்கு விக்கிரகமாக அதைக் கொடுத்தான். சனம் அதைக் கண்டு சந்தோஷப்பட்டு அதற்குத் தூபங்காட்டி அதை வணங்கினார்கள். இவ்விஷயத்தைக் குறித்துக் கர்த்தருக்குக் கோபம் மூண்டது. அவர் மோசேயிடம் அதை அறிவித்தார். மோசேயும் மலையிலிருந்து இறங்கி, விக்கிரக வணக்கத்தைக் கண்டு கோபங்கொண்டு தன் கைகளிலிருந்த கற்பனைகள் அடங்கிய இரண்டு கற்பலகைகளையும் தரையில் எறித்து உடைத்துவிட்டு, கர்த்தர் பக்கமானவர்கள் என்னண்டை வரக்கடவார்கள் என்க, லேவியின் குடும்பத்தினர் மோசேயிடம் சேர்ந்தார்கள். அவனவன் தன் பட்டயத்தை எடுத்துக்கொண்டு விக்கிரக ஆராதனை செய்யும் சனத்தைச் சங்காரம் பண்ணுங்கள் என்றான். அன்று சனத்தில் மடிந்தது மூவாயிரம். சங்காரத்தை நிறுத்தி மோசே சனத்துக்காகக் கர்த்தரிடம் வேண்டிக்கொண்டார். சனத்தின் பாவத்தை மன்னியும் இல்லாவிட்டால் என்பெயரைச் சீவப்புத்தகத்திலிருந்து கிறுக்கிப்போடும் என்று மோசே வேண்ட, கர்த்தர் சனத்தின் பாவத்தை மன்னித்தார்.

மோசே விக்கிரகத்தை உடைத்து அதைத் தூளாக்கித் தண்ணீரில் கலந்து அதை சனத்துக்குக் குடிக்கக் கொடுத்தார். உடைத்த கற்பலகைகளுக்குப் பதிலாக மறுபடியும் கர்த்தரிடஞ் சென்று இரண்டு புதியக்கற்பலகைகளைக்கொண்டு வந்தார். அவர் தெய்வ சமூகத்திலிருந்து வந்த போது அவர் முகம் பிரகாசித்தது. சனம் அவரைப் பார்க்க முடியவில்லை. அவர் தம் தலையை முக்காடிடவேண்டியதாயிற்று.

கர்த்தர் மலையில் கட்டளையிட்டபடி ஒரு ஆசரிப்புக் கூடாரம் ஒன்று செய்யப்பட்டது. அதில் பிரகாரம் பரிசுத்த ஸ்தலம், பரிசுத்தத்துக்குப் பரிசுத்த ஸ்தலம் ஆக மூன்று பாகங்கள் அமைக்கப்பட்டன. அதிபரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப்பெட்டி ஒன்று அமைக்கப்பட்டது. அதில் பிரமாணங்கள் அடங்கிய இரண்டு கற்பலகைகளும் வைக்கப்பட்டன. அதிபரிசுத்தஸ்தலம் ஒரு திரைச்சீலையால் மூடப்பட்டது. அங்கு பிரதான ஆசாரியன் வருஷத்துக்கு ஒருமுறை மாத்திரம் போகக்கூடும். சகல பலிகளும் பரிசுத்தஸ்தலத்தில் கொடுக்கப்பட்டன. அந்த ஆசாரிப்புக் கூடாரங் கம்புகளாலும் திரைச்சீலைகளாலும் செய்யப்பட்டிருந்தால், சனம் பிரயாணம் செய்யும்போது அதைத் தூக்கிக்கொண்டு போகக் கூடியதாயிருந்தது. புறப்படும்போது மோசே ஆண்டவரே எழுந்தருளும், உமது சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக, உம்மைப் பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக என்பார். மறுபடியும்

பாளையம் இறங்கும்போது மோசே கர்த்தாவே இஸ்ரவேலின் ஆயிரங்களுக்குள்ளே திரும்பிவாரும் என்று வேண்டிக்கொள்ளுவார். இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் சனம் சீனாய் வனாந்தரத்தை விட்டுப் புறப்பட்டது.

தபேரா என்ற இடத்துக்கு வந்தார்கள். அப்போது சனம் முறுமுறுத்து, எகிப்திலே எங்களுக்கு மச்சங்கள் முதலியன கிடைக்கும், இந்த வனாந்தரத்திலே மன்னாவைத்தவிர வேறொன்றுமில்லையே என்று கூக்குரலிட்டார்கள். மோசே கர்த்தரிடம் இது தன்னால் பொறுக்கமுடியாத பாரம் என்று முறையிட, கர்த்தர் இஸ்ரவேலிலே மூப்பரான எழுபது பெயரை நியமி, நாம் உன்மேல் இருக்கும் ஆவியை அவர்களுக்கும் பகிர்ந்து கொடுப்பேன் என்றார். அப்படியே மோசே எழுபது பேர்களை நியமிக்க, கர்த்தர் அவர்களுக்குத் தமது ஆவியைக் கொடுத்து அவர்களைத் திடப்படுத்தினார். பின்பு சனத்துக்கென்று மேல்காற்றை வீசச்செய்து பாளயத்துக்கு ஒருநாள் பயணதூரம், இந்த அந்தப் பக்கங்களில் காடைகளைக் கொண்டுவந்து இரண்டு முழம் உயரம் நிரப்பினார். சனம் ஆவலோடு அவற்றைப் பிடித்து, சேர்த்துவைத்து, ஆவலோடு தின்றார்கள். இன்னும் இறைச்சி அவர்கள் தொண்டைகளில் இருக்கும்போதே கர்த்தர் அவர்களில் அநேகரைக் கொன்றார். ஆகவே அந்த இடத்துக்கு இச்சையின் பிரேதக்குழி என்று அருத்தங்கொள்ளும் கிப்ரோத் ஹத்தாவா என்று பெயர் வந்தது.

பிறகு பாரான் வனாந்தரம் வந்து சேர்ந்தார்கள். மோசே கர்த்தரின் உத்தரவுப்படி பன்னிரண்டு கோத்திரங்களுக்குப் பன்னிரண்டு பேர்களைத் தெரிந்தெடுத்து பலிஸ்தீனு என்னப்பட்ட கானான் தேசத்தை வேவுபார்த்து வர அனுப்பினார். அவர்களில் பத்துப்பேர்கள் தேசம் செழிப்புள்ளது; ஆனால் அங்கிருக்கும் மனிதர் பராக்கிரமசாலிகள், நம்மைக் கொன்றுவிடுவார்கள் என்று கூற, சனம் பயந்து நடுங்கித் தாங்கள் எகிப்துக்குத் திரும்பிப்போவதே நல்லது என்று தீர்மானம் செய்தார்கள். மற்ற இரண்டு பேர்களாகிய யோசுவாவும், காலேயும், சனம் கர்த்தரை நம்பினால் செயமுண்டாகுமென்று தைரியங் கொடுத்தார்கள். சனத்துக்கோ நம்பிக்கை வரவில்லை. அவர்கள் நம்பிக்கைக் குறைவினிமித்தம் கர்த்தர் அவர்களைத் தண்டித்து வேவு பார்த்த நாற்பது நாட்களுக்குப் பதிலாக நாற்பது வருஷங்கள் வனாந்தரத்திலேயே சுற்றித் திரியுங்கள் என்று கட்டளையிட்டார்.

இப்படிச் சுற்றித்திரிந்த காலத்தில், மோசேயைக் குறித்தும், ஆரோனைக் குறித்தும் சிலருக்குப் பொறாமை யுண்டாயிற்று. என்ன, இவர்கள் மாத்திரம் என்னவிசேஷித்த பரிசுத்தர், கர்த்தருடைய சனம் எல்லாம் பரிசுத்தர்தானே என்று சொல்லித் தாங்களும் கர்த்தருக்குத் தூபம் காட்டுவோம் என்று ஆரம்பித்தார்கள். இவர்களில் முக்கியமானவர்கள் கோரா, டேத்தான், அபிராம் என்பவர்கள். இவர்களோடு சேர்ந்தவர்கள் இருநூற்றைம்பது பேர். இவர்கள் எல்லாரும் தூபம் காட்டுவது

கர்த்தருக்கு விரோதமாயிருந்தது. அவர்களுக்குண்-
டான தண்டனை மகா பயங்கரமானது. பூமி இரண்-
டாகப் பிளந்து முக்கியக் கலகக்காரரையும், அவர்-
களுக்குண்டான யாவற்றையும் அவர் குடியிருந்த
கூடாரங்களையும் மூடிவிட்டது. அதைக் கண்டவர்-
கள் பயந்து நடுங்கினார்கள். அவர்களோடு சம்பந்-
தப்பட்ட இருநூற்றைம்பது பேரையும் கர்த்த-
ரிடத்திலிருந்து வந்த ஒரு அக்கினி பட்சித்துப்
போட்டது. இதற்குக் காரணம் மோசேயென்று
முணுமுணுத்த சனத்துள் ஒரு கொள்ளைநோயுண்-
டாகி ஆயிரக்கணக்கான சனம் மடிந்தது. மோசே-
யும் ஆமிரானும் சனத்துக்காக வேண்டிக்கொண்ட-
படியால் வாதை நிறுத்தப்பட்டது. கர்த்தரால்
குறிக்கப்படாதவர்கள் இனி தூபம் காட்டத் துணி-
யாதபடி, கலகக்காரர் வைத்திருந்த தூபகலசங்க-
ளைக்கொண்டு ஒரு தகடுசெய்து அதை மோசே பலி-
பீடத்தின்மேல் போட்டார். கர்த்தர் கோத்திரத்-
துக்கொன்றாகப் பன்னிரண்டு கோல்களை ஆசரிப்புக்
கூடாரத்தில் உடன்படிக்கைப் பெட்டிக்கு எதிராக
வைக்கக் கட்டளையிட்டார். அடுத்தநாள் பார்த்த
போது ஆரோனின் கோல் மாத்திரம் துளிர்விட்-
டுப் பூத்து வாதுமைப் பழங்களைக் கொடுத்தது.
ஆகவே ஆரோன் மாத்திரம் தூபம் காட்டத்
தெரிந்துகொள்ளப்பட்டவன் என்பது திட்டமா-
யிற்று. உடன்படிக்கைப்பெட்டியில் துளிர்த்த
ஆரோனின் கோல் பத்திரப்படுத்தப்பட்டது.

சனம் பிரயாணஞ்செய்து சின் வனாந்தரத்-
துக்கு வந்தார்கள். அங்கே அவர்களுக்குக் குடிக்

கத் தண்ணீர் இல்லை. மோசேயும் ஆரோனும் கர்த்தரிடம் வேண்டிக்கொண்டார்கள். கர்த்தர் சனத்தையெல்லாம் திரட்டிக்கொண்டு எதிரே நிற்கும் கன்மலையிடம் பேசும்படி மோசேயுக்குக் கற்பித்தார். மோசேயுக்கும் நம்பிக்கைக் குறைந்தது. கன்மலையோடு பேசாதபடிக்குத் தம் கையிலுள்ள கோலினால் சனம் பார்க்க மோசே கன்மலையை அடித்தார். என்றாலும் தண்ணீர் புறப்பட்டது. சனம் குடித்துத் திருப்தி அடைந்தது. ஆனால் கர்த்தர் மோசேயைக் கண்டித்தார். மோசேயின் நம்பிக்கைக் குறைவுக்காக, சனத்தை வாக்குத் தத்தின் தேசத்தில் மோசே கொண்டுபோகப் பாத்திரமில்லை யென்பதைத் தெரிவித்தார். அங்கு நடந்த போராட்டத்தினிமித்தம் அவ்விடம் மெரிபா என்று அழைக்கப்பட்டது.

அங்கிருந்து ஓர் என்ற பர்வதத்துக்கு வந்தார்கள். கர்த்தர் மெரியாவில் நடந்த சம்பவத்தினிமித்தம் ஆரோனும் கானான் தேசத்துக்குள் பிரவேசிக்கக்கூடாது என்று கட்டளையிட்டார். அந்த ஓர் பர்வதத்தில் ஆரோன் மர்த்தான், ஆரோனின் மகனாகிய எலியேசருக்கு அந்த ஊழியம் கொடுக்கப்பட்டது. சனம் ஆரோனுக்காக முப்பதுநாள் துக்கம் கொண்டாடினார்கள்.

ஏதோமியர் நாட்டின் எல்லைக்கு வந்தபோது அதைக் குறுக்கே கடந்துபோக மோசே ஏதோமியரின் அரசனை உத்தரவு கேட்டார். ஆனால் உத்தரவு கிடைக்கவில்லை. ஆகவே ஏதோமியரின் தேசத்தைச் சுற்றிக்கொண்டு சிவந்த சமுத்திரத்

தின் ஓரமாகப் பிரயாணம் செய்ய நேரிட்டது. சனம் மறுபடியும் முணுமுணுத்தது. கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை அனுப்பி சனத்தைத் தண்டித்தார். சனம் குணப்பட்டபோது கர்த்தர் மோசேயை நோக்கி ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டுபண்ணி அதை ஒரு கோவில் உயரமாகத் தூக்கு. பாம்பினால் கடிபட்ட சனம் அந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தால் பிழைக்கும் என்றார். வெண்கல சர்ப்பத்தின் மூலமாக அநேகருக்கு சீவன் தப்பிற்று.

இப்படியாகப் பிரயாணஞ்செய்து சனம் மோவாபியரின் எல்லைக்கு வந்தது. மோவாபின் அரசனாகிய பாலாக்குச் சனத்தினிமித்தம் இவர்கள் சத்துருக்களுக்குப் பலவிடங்களிலும் உண்டான தோன்பங்களைக் கேள்விப்பட்டுப் பயந்து இவர்களுக்கு எப்படியாகிலும் சாபமுண்டாக்கி இவர்களை நசிக்கப் பண்ணவிரும்பினான். இதற்கென்றுஐபிராத்துநதிக் கரையில் மெசெபொத்தேமியாவில் வசித்த பாலாம் என்ற கர்த்தருடைய தீர்க்கதரிசிகளில் ஒருவருக்கு ஆட்களை அனுப்பி, அரசன் வெகுமதிகொடுப்பார். நீர் நேரில்வந்து இந்தத் திரளான சனம் நசித்துப் போகும்படியாக அதை சபித்துப்போடுமென்று சொல்லியனுப்பினான். தீர்க்கதரிசி கர்த்தரிடம் கேட்டபோது உத்தரவு கிடைக்கவில்லை. ஆகவே வரமுடியாதென்று மறுத்துவிட்டார். மறுபடியும் அரசன் வெகுவான வெகுமதிகளை அனுப்பி, வந்து சனத்தைச் சபிக்கவேண்டுமென்று தயவாய் வேண்டிக்கொண்டான். தீர்க்கதரிசிக்குப் பணத்

தின்மேல் சற்று ஆசை ஏற்பட்டது. அவர் திரும்பக் கர்த்தரிடம் உத்தரவு தேடினர். கர்த்தருக்குக் கோபமுண்டாயிற்று. தீர்க்கதரிசி பிடிவாதமாய்க் கேட்கவே, கர்த்தர் அவரை அவர் பிடிவாதத்திற்கே ஒப்புக்கொடுத்தார். தம் கழுதையின்மேல் சேணம்போட்டுத் தீர்க்கதரிசி மோவாவுக்குப் புறப்பட்டார். போகும் வழியில் கர்த்தருடைய தூதன் உருவின பட்டயத்தோடு கழுதைமுன் நின்று வழியை மறித்தார். கழுதையின் கண்களுக்குத் தேவதூதன் காணப்பட்டான். தீர்க்கதரிசியின் கண்களுக்கோ அது மறைந்திருந்தது. கழுதை ஒருமுறை பாதையைவிட்டு வயலில் இறங்கிற்று. மற்றொருமுறை இங்குமங்கும் போகக்கூடாத இடமாயிருந்தபடியால் கழுதை படுத்துக்கொண்டது. தீர்க்கதரிசிக்குக் காரியம் விளங்காமல் கழுதையை அடித்தான். அப்போது கர்த்தர் கழுதையின் வாயைத்திறந்து அது மனிதபாஷையில் பேசும்படி அதற்கு வல்லமையைக் கொடுத்தார். அது தன் எசமானை நோக்கி நீர் என்னை அடிக்கிறதென்ன? நான் இதுகாறும் உமக்கு உண்மையாய் உழைக்கவில்லையோ? இப்போது தேவதூதன் என் வழியை மறைத்துக் கொள்ள நீர் அதை அறியாமல் அடிக்கிறதென்னவென்று முறையிட்டது. அப்போது தீர்க்கதரிசிக்கும் கண் திறந்தது. தேவதூதன் நிற்கிறதைக் கண்டார். அவருடைய குற்றம் அவருக்கு உணர்த்தப்பட்டது. பிடிவாதமாகக் கர்த்தரிடம் கேட்டுப் புறப்பட்டதற்காக விசனமடைந்தார். திரும்பிவிடுவதாகத் தீர்மானம் செய்தார். கர்த்தர் தேவதூதன் மூலமாக அவருக்குக் கூறினதென்ன

வென்றால், நீ திரும்பவேண்டாம். மோவாபியருடைய நாட்டுக்குச்செல். ஆனால் அங்கு நான் உன்வாயிலே கொடுக்கும் வார்த்தைகளை மாத்திரம் கூறு என்று கட்டளையிட்டார். அப்படியே பாலாம் மோவாபியருடைய நாட்டை யடைந்தான். மோவாபின் அரசன் சந்தோஷத்தோடு அவரை மலைச்சிகரங்களிலே கொண்டுபோய் சுற்றிலும் பாளையம் இறங்கியிருக்கும் திரளான சனங்களைக் காட்டினான். ஏழு பலிபீடங்கள் கட்டப்பட்டுப் பலிகள் கொடுக்கப்பட்டன. அப்போது பாலாமுக்குக் கர்த்தருடைய வார்த்தையுண்டாகி, கர்த்தர் சபிக்காத சனத்தை நான் எப்படி சபிப்பது, கர்த்தர் பகையாத சனத்தை நான் எப்படிப் பகைப்பதென்றுசொல்லி சனத்தை சபிக்காமல் ஆசீர்வதித்தார். இப்படியே மூன்று இடங்களில் நடந்தது. பாலாம் திரும்பத்திரும்ப சனத்தை ஆசீர்வதித்தார். அப்போது அரசனாகிய பாலாக்குக்கு பாலமின் பேரில் கோபமூண்டு அவரை அனுப்பிவிட்டான்.

ஆனால் அவர் பாலக்கைவிட்டுப் போகுமுன்னதாக அவனுக்கு ஒரு பொல்லாத யோசனை கொடுத்துப் போனதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மோவாயிலே நடக்கும் திருவிழா ஒன்றில் பெண்கள் சாதாரணமாக வெளிப்படுவார்கள். அந்தத் திருவிழா சமயத்தில் இஸ்ரவேல் சனத்தைத் தடைசெய்யாமல் விட்டுவிட வேண்டுமென்றும், அவர்கள் விக்கிரகவணக்கத்திலும் பெண்கள் சகவாசத்திலும் தாங்களே சிக்கிக்கொள்ளுவார்கள்; அப்போது தாங்களே சாபத்தைத் தருவித்

துக்கொள்ளுவார்கள் என்பதாக பாலாம் பாலாக்குக்குச் சொல்லிப்போனதாக ஒரு சரித்திரம் உண்டு. அப்படியே நடந்து, சனத்தில் இருபத்து நாலாயிரம்பேர் மாண்டுபோனதாகவும் தெரிகிறது.

மோசே பிறகு கர்த்தருடைய கட்டளைப்படி ஆயுதம் தரிக்கத்தக்க ஆண்கள் இருபத்து மூவாயிரம் உண்டெனக் கணக்கிட்டார். அவர்களைக் கொண்டு மோவாபியரோடும், மீதியானியரோடும் யுத்தம்செய்து அவர்கள் அரசர்களையும் பிரபுக்களில் அநேகரையும் கொன்றூர்கள். அப்போது பொல்லாத யோசனைகொடுத்த தீர்க்கதரிசியாகிய பாலாமும் கொல்லப்பட்டார்.

கர்த்தர் பிறகு மோசேயை நோக்கி இப்போது உன் வேலைகள் முடிந்தன. நீ மேரிபாவிலே என் மேல் நம்பிக்கை குறைந்து, நான் கன்மலையோடு பேசு என்று சொன்னபோது, அதைக் கோபத்தினல் அடித்த உன்பாவத்தினிமித்தம் கானன்தேசத்தில் பிரவேசிக்கக்கூடாது. உன் தானத்திலே யோசுவாவை ஏற்படுத்து. அவன் சனத்தை நடத்தட்டும். நீ ஆபரீம் மலையில் ஏறி அதன் கொடுமுடியாகிய பிஸ்காவிலிருந்து நான் சனத்துக்குக் கொடுக்கப்போகிற கானன் தேசத்தைப் பார்த்துக் கொள். அங்கே நீ மரிப்பாய். உன்னை சனம் தெய்வம்போல் கொண்டாடாதபடி நாம் உன்னை சனத்துக்கு மறைவாக அடக்கம்செய்வோம் என்று கட்டளையிட்டார்.

அப்படியே மோசேயும் யோசுவாவைச் சனத்துக்குத் தலைமையாக ஏற்படுத்தினர். சனத்தையெல்லாம் கூட்டிச் சேர்த்துக் கர்த்தர் அவர்களை நடத்திவந்த விதத்தையெல்லாம் அவர்களுக்கு ஞாபகப்படுத்தினர். கர்த்தர் கொடுத்த கட்டளைகளை அவர்கள் மறந்துபோகாதபடி அவற்றை உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கும்படி கட்டளையிட்டார். சனத்துக்குமுன் இரண்டு மார்க்கங்களை வைத்தார். ஒன்று கர்த்தருக்குப் பயந்து அவருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும் மார்க்கம்; மற்றொன்று கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் தங்கள் இஷ்டம்போல் சீவித்துச் சாபத்தைச் சம்பாதிக்கும் மார்க்கம். இவையிரண்டையும் சனத்தின் முன்வைத்து அவர்களை ஆசீர்வாதத்தின் மார்க்கத்தைத் தெரிந்துகொள்ள ஏவினர். ரூபன் கோத்திரத்திற்கும் காத் கோத்திரத்திற்கும் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள பாகத்தில் குடியேறலாம் என்று உத்தரவு கொடுத்தார். மனாசேயின் பாதிகோத்திரத்திற்கும் அப்படியே. சனம் கானான் தேசத்தில் பிரவேசிக்கும்போது அங்கே இருக்கும் சனங்களை அவர்கள் விக்கிரக ஆராதனைக்காரரானபடியால் அவர்களை முற்றிலும் நிர்மூலமாக்கவேண்டியது. அப்படிச் செய்யாமல் அவர்களை விட்டுவிட்டு அவர்களோடு உறவாடும் பட்சத்தில் அவர்கள் இஸ்ரவேல் சனத்துக்கு முள்ளுக்களைப்போல் வாதையாயிருப்பார்கள். என்பதைத் திட்டமாய் வற்புறுத்தினர். என்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியைக் கர்த்தர் உங்கள்